# கிறிஸ்துவின் நற்செய்தி

# THE GOSPEL OF CHRIST




J.C. CHOATE

E.Z.S. RAJANAYAGAM

# கிறிஸ்துவின் நற்செய்தி

## The Gospel Of Christ

**வேத வசனங்களில் போதிக்கப்பட்டுள்ளபடி
பதிமூன்று பாடங்கள்**

**J.C. சோட்**
**E.Z.S. ராஜநாயகம்**

Published by

**Tamil World Evangelism**

278, Dharapuram Road, Kangayam -638 701.
Tamilnadu, India.

**Phone : 04257 - 230030, cell : 98427 30382.**

# THE GOSPEL OF CHRIST
# கிறிஸ்துவின் நற்செய்தி


Author : J.C. CHOATE



Copy Right Reserved © 2023



First Printing : October 2023

Copies : 2000

Language : Tamil

Translation : E.Z.S. Rajanayagam/
B. Benny Martin

பிரதிகளுக்கு

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**

278, தாராபுரம் ரோடு

காங்கயம் - 638 701,

இந்தியா.

Phone : 04257 - 230030, cell : 98427 30382.

# பதிப்பாசிரியர் உரை

கிறிஸ்துவின் நற்செய்தி என்னும் இந்நூலை நம் தாய்மொழித் தமிழில் கொண்டு வர உதவி செய்த தேவனுக்கு நான் நன்றிகளைப் படைக்கிறேன்.

உலகியல் ரீதியாக நற்செய்தி என்னும் பதம் பல நிலைகளில் பலவற்றுக்குப் பயன்படுத்தப்பட்டாலும், அகில உலகுக்குமான நற்செய்தியாக இன்றளவும் பிரகாசிக்கும் நட்சத்திரமாக இருப்பது ஒன்றே ஒன்றுதான். அது, எது என்று நானும் நீங்களும் சொல்லுவதை விட, சத்தியமுள்ள தேவனும், அவருடைய வார்த்தைகளும் சொல்வது தான் மிகச் சரியாக இருக்கும். ஆம், இயேசு ஆண்டவர் உலகை இரட்சிக்கும்படியாக மண்ணில் அவதரிக்க நேர்ந்தபோது, தேவ தூதர்களால் "...இதோ எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்று சொல்லப்பட்டது (லூக் 2:10). இந்நற்செய்திக்கு இணையான ஒரு செய்தி இன்றளவும் மனித வரலாற்றில் இல்லை. இனி இருக்கப் போவதுமில்லை.

ஆம், இம்மைக்கும், மறுமைக்கும் பயன் தரக்கூடிய கிறிஸ்துவின் நற்செய்தி சம்பந்தமான அனைத்து காரியங்களும் இந்நூலில் பல கோணங்களில் 13 பாடங்கள் வாயிலாக விரிவாகக் கொண்டு வரப்பட்டுள்ளது. எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக் கொள்ளுங்கள் (1தெச :5:21) என்ற வசனத்தை மனதில் ஏந்தினவர்களாக இந்நூலைப் படித்துப் பயன் பெறுங்கள்.

கிறிஸ்துவின் நற்செய்தி உங்கள் உள்ளத்தைத் தொடுமானால், நற்செய்தியின் உபதேசத்துக்கு உங்களை ஒப்புக் கொடுங்கள். அத்தோடு, பிறருக்கும் இச்செய்தியை அறிவியுங்கள்! அனைவரும் ஆசீர்வதிக்கப்படுவோம்!!


நன்றி

அக்டோபர் . 2023

காங்கயம் – 638701

கிறிஸ்துவின்

இராஜ்ஜிய விரிவாக்கப் பணியில்



E.Z.S. **ராஜநாயகம்**

# முன்னுரை

இப்பாடங்கள் முதலில் தனிநபர் மற்றும் வகுப்பறை சூழ்நிலையை மனதில் கொண்டு தயாரிக்கப்பட்டன. பாடங்கள் எளிமையாகவும் அதே நேரத்தில் கருத்துள்ளவைகளாகவும் இருக்க உறுதியான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் கேள்விகள் சேர்க்கப் பட்டுள்ளன.

இப்பாடப் புத்தகத்தின் கருப்பொருள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். வேதாகமம் சுத்த சுவிசேஷம் ஒன்று இருப்பதாக நமக்குப் போதிக்கிறது. ஆனால், முற்றிலும் வித்தியாசமாக மத உலகம் பல சுவிசேஷங்கள் இருப்பதாகச் சொல்கிறது. இதன் காரணமாக தேவனுடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற சுவிசேஷத்தைப் படிப்பது இன்னும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகிறது. இதன் மூலம் நாம் சத்தியத்தை அறிந்துகொள்ளுவது மட்டுமல்லாமல், உபதேசப் பிழைகளிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ளவும் முடியும்.

இப்பாடங்களில் இடம் பெற்றுள்ள நற்செய்தியின் செய்திகள் தேவனுடைய வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றன. இது நற்செய்தியையும், மகிழ்ச்சியான செய்தியையும் நமக்கு அடையாளப் படுத்துகிறது. இது ஏன் நற்செய்தியாக இருக்கிறதென்றால், இது கிறிஸ்து மரித்தார், அடக்கம் பண்ணைப்பட்டார் உயிர்த்தெழுந்தார். அதன் காரணமாக மனித இனம் சுவிசேஷ கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து பாவத்திலிருந்து இரட்சிப்பையும் நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையைப் பெற வழிவகுத்தது. மோசமான செய்திகளும், ஏராளமான பிழைகளும், அதிக அழிவுகளும் காணப்படும். இக்காலக் கட்டத்தில் இந்த இரட்சிப்பு இன்றும் நமக்குக் கிடைக்கிறது என்பது நமக்குப் புத்துணர்ச்சியை அளிக்கிறது.

தயவு செய்து இப்பாடங்களை தேவனுடைய வார்த்தையை அறிந்து கொள்ளும் ஆசையுடன் படியுங்கள். எழுதிக்கொடுக்கப் பட்டவைகள் எல்லாம் உண்மைதான் என்பதை நிச்சயப்படுத்த ஒவ்வொரு வார்த்தையையும் புதிய ஏற்பாட்டோடு ஒப்பிட்டுப் பாருங்கள். கவனமாக ஆராய்ந்த பிறகு இது உண்மை என்று நீங்கள் கண்டால் இதை நீங்கள் விசுவாசித்து இதற்கு கீழ்ப்படிய வேண்டு மென்று உங்களை உற்சாகப்படுத்துகிறோம்! அப்போது நீங்கள் உண்மையாகவே உங்கள் நண்பர்களிடம் பகிர்ந்துகொள்ள உங்களிடம் நற்செய்தி இருக்கும்.

J.C. Choate
Winona, Mississippi
June 1, 2000

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| பாடம் 1 | கிறிஸ்துவின் நற்செய்தி | ... 1 |
| பாடம் 2 | நற்செய்தியின் உண்மைகள் | ... 8 |
| பாடம் 3 | நற்செய்தி அழைப்பு | ... 13 |
| பாடம் 4 | நற்செய்திக்குக் கீழ்ப்படிதல் | ... 19 |
| பாடம் 5 | நற்செய்தியைக் கேள்விப்படுதல் | ... 25 |
| பாடம் 6 | தேவனிடத்தில் விசுவாசம் | ... 31 |
| பாடம் 7 | பாவங்களிலிருந்து மனந்திரும்புதல் | ... 36 |
| பாடம் 8 | கிறிஸ்துவை அறிக்கை பண்ணுதல் | ... 42 |
| பாடம் 9 | பாவ மன்னிப்புக்கான ஞானஸ்நானம் | ... 47 |
| பாடம் 10 | நற்செய்தியின் ஆசீர்வாதங்கள் | .... 54 |
| பாடம் 11 | நற்செய்தியைப் பிரசங்கித்தல் | ... 61 |
| பாடம் 12 | மற்ற நற்செய்திகளைப் பிரசங்கித்தல் | ... 66 |
| பாடம் 13 | நற்செய்தியைத் தடை செய்தல் | ... 72 |

# கிறிஸ்துவின் நற்செய்தி

**இந்நூலை, அஞ்சல் வழி வேதாகம கல்விக்காகப் பயன் படுத்த விரும்புவோருக்கான அறிவுரைகள்.**

உங்கள் வேதாகமத்தைக் கரங்களில் வைத்துக் கொண்டு, இதிலுள்ளவைகளை முழுமையாகப் படித்து ஒவ்வொரு பாடமாக முடித்து, தனித்தாளில் கேள்விக்கான பதில்களை எழுதுங்கள்.

தாளின் மேல் பகுதியில், இது எந்தப் பாடத்திற்கான பதில்கள் என்பதைத் தெளிவாகக் குறித்து விடுங்கள். அப்படி ஒவ்வொரு பாடமாக முடித்த நிலையில், விடைத்தாள்களை மட்டும் பத்திரமாக எங்களுக்கு அனுப்புங்கள்.

ஒட்டு மொத்தமாக எல்லாப் பாடங்களையும் முடிக்கத் தாமதமானால், முதலில் நான்கு அல்லது ஐந்து பாடங்களை முடித்து அனுப்பி விட்டுப் பிறகு எஞ்சியுள்ள பாடங்களை அடுத்த தவணைகளில் முழுவதும் முடிக்கும் வரை அனுப்பலாம். அவைகள் திருத்தப்பட்டு, மதிப்பெண்களோடு உங்களுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

இப்பாடத்தை நீங்கள் படிக்க முன் வருவதற்காக வாழ்த்துக்கள். நிச்சயமாக அதிக ஆன்ம நன்மைகள் கிடைக்கும்.

**– ஆசிரியர்**

பாடம் – 1

# கிறிஸ்துவின் நற்செய்தி

# The Gospel of christ

**பு**திய ஏற்பாட்டில் நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து எண்ணற்ற முறை வாசிக்கிறோம். இதைக் குறித்து மற்றவர்கள் பேசுகிறதையும் நாம் கேட்கிறோம். நாம் சுவிசேஷத்தை வேறுபட்ட விதங்களில் குறிப்பிடுகிறோம். ஆனால், உண்மையில் நற்செய்தி என்றால் என்ன? கிறிஸ்துவின் நற்செய்தி என்றால் என்ன? இதற்கான பதிலுக்காக நாம் வேத வாக்கியங்களுக்குத் திரும்புவோம். பவுல் இவ்விதமாக எழுதுகிறார்: அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது. யூதனென்றும், கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை, எல்லாருக்குங் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார்.

ஆதலால், கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப் படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லா விட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே [ரோமர் 10:11–15].

அடிப்படையில் சுவிசேஷம் என்னும் பதம் நற்செய்தி, இரட்சிப்பு, வார்த்தை, வாக்குத்தத்தம், மற்றும் நம்பிக்கை போன்ற பொருள்களைக் கொடுக்கிறது. இவ்வார்த்தை கிறிஸ்துவின் நற்செய்தியைப் பொருத்த வரை மற்ற எல்லா செய்திகளிடமிருந்து வேறுபட்டதாயும், மேன்மை யானதாயும் உள்ளது. இந்நற்செய்தி இயேசு கிறிஸ்துவின் மரணம் அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதலை அடிப்படையாகக் கொண்ட தாகும். அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதும் போது இவ்விதமாக எழுதுகிறார். *அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள்.*

*நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே இரட்சிக்கப்படுவீர்கள். மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்தார்'* (1 கொரிந்தியர் 15:1–4). ஆனால், இது எப்படி நற்செய்தியாக இருக்க முடியும்? ஏனென்றால், கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலின் மூலமாகத்தான் ஒருவர் இரட்சிக்கப்படுகிறார். அது மாத்திரமல்லாமல், நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையையும் பெறுகிறார். பவுல் மறுபடியும் இவ்விதமாக எழுதுகிறார். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன், முன்பு யூதரிலும், பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக் கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப் பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசு வாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப் படுகிறது. (ரோமர் 1:16,17).

நற்செய்தி என்பது நம் அன்றாட வாழ்வில் நமக்கு என்ன பொருள் கொடுக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். நாம் சில ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளும்போது மிகவும் மகிழ்ச்சி அடைந்து அந்த நற்செய்தியை எல்லோருக்கும் அறிவிக்க விரும்புவோம். இது இயற்கையானது தான். இது கிறிஸ்து மூலமாக கிடைக்கும் இரட்சிப்பின் நற்செய்திக்கும் பொருந்துகிறதாக இருக்க வேண்டும். நாம் கர்த்தருக்குக் கீழ்படிந்து, அவருடைய கிருபையினால் இரட்சிக்கப்பட்டிருந்தால் நாம் இவ்வுலகத்திற்கு அதைக் குறித்து சொல்ல விரும்ப வேண்டும். அதனால் தான் நம் ஆண்டவர் இவ்விதமாகச் சொன்னார். பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று(மாற்கு 16:15,16).

வேத வாக்கியங்கள் தேவனுடைய நற்செய்தி குறித்துப் பேசுகின்றன. இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்போஸ் தலனாகும்படி அழைக்கப்பட்டவனும், தேவனுடைய சுவிசேஷத் திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவனுமாகிய பவுல், ரோமாபுரியிலுள்ள தேவப்பிரியரும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர் களுமாகிய அனைவருக்கும் எழுதுகிறதாவது.

*நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும், சமாதானமும் உண்டாவதாக. இயேசுகிறிஸ்துவைக் குறித்துத் தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பரிசுத்த வேதாகமங்களில் முன்னே தம்முடைய சுவிசேஷத்தைப்பற்றி வாக்குத்தத்தம் பண்ணினபடி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவானவர், மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவ குமாரனுமாயிருக்கிறார். அவர் சகல ஜாதிகளையும், அவர்களுக்குள் இயேசு கிறிஸ்துவினால் அழைக்கப்பட்டவர்களாகிய உங்களையும், தமது நாமத்தினிமித்தம் விசுவாசத்துக்குக் கீழ்ப்படியப் பண்ணும்பொருட்டு, எங்களுக்குக் கிருபையையும் அப்போஸ்தல ஊழியத்தையும் அருளிச் செய்திருக்கிறார். (ரோமர் 1:1-7).*

இதே விதமாகத்தான் அப்போஸ்தலனாகிய பவுல் தேவனுடைய கிருபையின் சுவிசேஷம் பற்றிப் பேசுகிறார். *ஆகிலும், அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன். என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன். என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்* [அப்போஸ்தலர் 20:24]. இவ்வசனப் பகுதிகள் தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும் இடையே காணப்படும் ஒற்றுமையைத் தான் காட்டுகின்றன. தேவனே தான் இவ்வுலகத்திற்கு சுவிசேஷத்தைக் கொடுக்க கிறிஸ்துவை அனுப்பினார். இவ்விதமாக சுவிசேஷமானது தேவனுடைய சுவிசேஷம் அல்லது கிறிஸ்துவின் சுவிசேஷம் என்றும் குறிப்பிடப்படுகிறது.

மறுபடியும் நாம் தேவனுடைய மகிமையான சுவிசேஷம் பற்றி வாசிக்கிறோம். '*நித்தியானந்த தேவனுடைய மகிமையான சுவிசேஷத்தின்படி எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிற ஆரோக்கியமான உபதேசத்திற்கு எதிரிடையாயிருக்கிற மற்றெந்தச் செய்கைக்கும் விரோதமாய் விதிக்கப்பட்டிருக்கிறது (1 தீமோத்தேயு 1:11). மேலும் நாம் இவ்விதமாக வாசிக்கிறோம். எங்கள் சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால், கெட்டுப்போகிறவர்களுக்கே அது மறைபொருளாயிருக்கும். 'தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் . அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்'* [2 கொரிந்தியர் 4:3,4]. சுவிசேஷமானது மகிமையானது என்று சொல்லப்படுகிறது. அதன் பொருள், பரலோகத்துக்குரியது, நித்தியமானது என்பவையகளாகும். மேலும், சுவிசேஷமானது தேவனிடத்திலிருந்தும், கிறிஸ்துவினிடத்திலிருந்தும் வந்ததாகும்.

மத்தேயு, மாற்கு , லூக்கா மற்றும் யோவான் போன்ற புத்தகங்களில் ராஜ்ஜியத்தின் சுவிசேஷம் என்னும் சொற்றொடர் பலமுறை பயன் படுத்தப்பட்டிருக்கிறது. பின்பு, இயேசு சகல பட்டணங்களையும், கிராம ங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டா யிருந்த சகல வியாதிகளையும், சகல நோய்களையும் நீக்கி அவர்களைச் சொஸ்தமாக்கினார்' [மத்.9:35].

*யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று, மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார்' (மாற்கு 1:14,15).*

இக்கால கட்டங்களில் கிறிஸ்துவும், மற்றவர்களும் வரவிருந்த ராஜ்யத்தின் நற்செய்தி பற்றி பிரசங்கித்தார்கள். வேறுவிதமாகச் சொன்னால், ராஜ்ஜியம் அப்போது ஸ்தாபிக்கப்படவில்லை. ஆனால், விரைவில் ஸ்தாபிக்கப்படவிருந்தது. பிற்பாடு சுவிசேஷம் நம் ஆண்டவருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலை அடிப்படையாகக் கொண்டு பிரசங்கிக்கப்பட்டது. அதன் கட்டளை களுக்கு கீழ்ப்படிந்தவர்கள் இரட்சிக்கப்பட்டு கர்த்தருடைய சபையிலே அல்லது ராஜ்ஜியத்திலே சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் [அப் 2].

அதன் பின்பு நாம் இரட்சிப்பின் சுவிசேஷம் பற்றி வாசிக்கிறோம். எபேசிய கிறிஸ்தவர்களுக்கு பவுல் இவ்விதமாக எழுதுகிறார். 'நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்கள் முத்திரை போடப்பட்டீர்கள் [எபேசியர் 1:13]. சில வேளைகளில் நாம் இரட்சிப்பின் சுவிசேஷ திட்டத்தை பற்றி பேசுகிறோம். இது மனிதனை இரட்சிப்பதற்கு கர்த்தருடைய திட்டம் அல்லது இரட்சிப்பின் வழி பற்றி விவரிக்கிறது.

அடுத்ததாக, நமக்கு சமாதானத்தின் சுவிசேஷம் உண்டு. ரோமர் 10:15 ல் நாம் இவ்விதமாக வாசிக்கிறோம் 'அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே [ரோமர் 10:15]. அதுபோல் எபேசியர் 6:14–16, இவ்விதமாகச் சொல்கிறது. *சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும், சமாதானத்தின் சுவிசேஷத் திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களாலே தொடுத்தவர்களாயும், பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்*

*திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர் களாயும் நில்லுங்கள்* [எபேசியர் 6:16]. சுவிசேஷம் சமாதானத்தை கொண்டு வருகிறது. அதாவது, மனதுக்கு சமாதானத்தை கொண்டு வருகிறது, ஆத்துமாவுக்கு சமாதானத்தை கொண்டு வருகிறது. சக மனிதர்களோடு சமாதானத்தை கொண்டு வருகிறது. கிறிஸ்து சமாதானத்தின் மனிதராக இருந்தார். அவருடைய சுவிசேஷம் அவர் தேவனோடு அனுபவித்த சமாதானத்தைக் கொண்டு வருகிறது அதாவது, தேவ சமாதானத்தை கொண்டு வருகிறது. இது நிச்சயமாக நற்செய்திதானே.

கடைசியாக, நாம் நம்பிக்கையின் நற்செய்தி பற்றி வாசிக்கிறோம். முன்னே அந்நியராயும், துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களா யுமிருந்த உங்களையும் பரிசுத்தராகவும், குற்றமற்றவர்களாகவும், கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார். நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையை விட்டு அசையாமல், ஸ்திரமாயும், உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும். அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. அதற்கென்றே பவுலாகிய நான் ஊழியக் காரனானேன் [கொலோசெயர் 1:21–23]. ஒருவர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவதின் பலனாக ஜீவனுக்கான நம்பிக்கையையும், நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையையும் பெற்றுக் கொள்கிறார். இதைக் குறித்து தான் பவுல் இவ்வசனப் பகுதியில் பேசுகிறார். நம்பிக்கை வேறு எந்த வழியிலும் வராது.

அப்போஸ்தலனாகிய பவுல் அவ்வப்போது என் சுவிசேஷம் அல்லது எங்களுடைய சுவிசேஷம் என்று குறிப்பிடுவதை நாம் பார்க்கிறோம். இதன் பொருள் என்ன? இங்கே பவுல் தானும் மற்றவர் களும் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக் கொண்ட சுவிசேஷம் பற்றித் தான் பேசுகிறார்.'எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத் தோடும் வந்தது. நாங்களும் உங்களுக்குள்ளே இருந்தபோது உங்கள் நிமித்தம் எப்படிப்பட்டவர்களாயிருந்தோமென்று அறிந்திருக் கிறீர்களே'[1 தெசலோனிக்கேயர் 1:5]. இங்கேயும், ரோமர் 1: 16 ல் குறிப்பிடப்பட்டிருக்கிறபடி விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பலனாய் இருக்கிறது.

வேதவாக்கியங்களின் வெளிச்சத்தில் இதுதான் சுவிசேஷமாய் இருக்கிறது. இது எளிமையாய் இருந்தாலும் மிகவும் வல்லமை உள்ளதாய் இருக்கிறது. இது இன்று போல புதியதாகவும், கிறிஸ்துவைப் போல காலமற்றதாகவும் உள்ளது. இந்த சுவிசேஷம் நம்மை இரட்சிக்கிறது, நமக்கு நம்பிக்கையைக் கொடுக்கிறது. எல்லோருக்கும் பிரசிங்கிக்கப்பட வேண்டிய சுவிசேஷம் ஒன்றுதான். இந்த சுவிசேஷம் கிறிஸ்தவனிடத்திலிருந்தும் தேவனிடத்திலிருந்தும், வந்தது இது மகிமையானது. இது நம்மை ஆசீர்வதிக்கிறது. அதே நேரத்தில் நமக்கு பொறுப்புகளையும் தருகிறது. இந்த சுவிசேஷம் ஒவ்வொருவருக்கானது, அதே நேரத்தில் எல்லோருக்குமானது. உண்மையாகவே இதுதான் நற்செய்தி.

## கேள்விகள்

1. ரோமர் 10:11–15 வசனங்களை வாசியுங்கள்.
2. நற்செய்தியை விவரியுங்கள்
3. நற்செய்தி எதை அடிப்படையாகக் கொண்டது?
4. எப்பஐ கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் நற்செய்தியாக இருக்க முடியும்?
5. ரோமர் 1 : 16 17 வசனங்களை மேற்கோள்காட்டு.
6. உலகப் பிரகாரமான காரியங்களில் நற்செய்திக்கு நாம் எப்படி பதிலளிப்போம்?
7. மாற்கு 16:15 ,16 வசனங்களில் கிறிஸ்து என்ன போதித்தார்?
8. எந்த விதத்தில் சுவிசேஷம் தேவனுடையது என்று நாம் பேச முடியும்?
9. நற்செய்தி மகிமையானது என்பதை விவரி?
10. ராஜ்யத்தின் நற்செய்தி பற்றி விவாதி
11. ராஜ்ஜியத்தின் சுவிசேஷத்திற்கு ஆதாரமாக சில வசனங்களைக் குறிப்பிடு

12. எப்போது முதன் முதலில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது?

13. எது இரட்சிப்பைக் கொண்டு வருகிறது? எப்படி?

14. நம்முடைய நம்பிக்கை எங்கே இருக்கிறது?

15. எவ்விதத்தில் சுவிசேஷம் சமாதானத்தைக் கொண்டு வருகிறது?

16. ஏன் பவுல் "என் சுவிசேஷம்" அல்லது "நம் சுவிசேஷத்தைப்" பற்றி பேசினார்.

17. சுவிசேஷத்திற்கு எவ்வளவு வல்லமை இருக்கிறது?

18. எத்தனை சுவிசேஷங்கள் உண்டு?

# நற்செய்தியின் உண்மைகள்

# The Facts of The Gospel

இயேசு கிறிஸ்து மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு கல்லறையில் இருந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்று வேதவாக்கியங்கள் தெளிவாகப் போதிக்கின்றன. இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் நடந்த இச்சம்பவங்கள் தான் நற்செய்தியின் உண்மைகளாக குறிப்பிடப்பட்டிருக்கின்றன. பவுல் தன்னுடைய கொரிந்து பட்டணத்து சகோதரர்களுக்கு எழுதும் போது அவைகளை ஒன்றன் பின் ஒன்றாகக் குறிப்பிடுகிறார். அது மாத்திரமல்ல, இங்கே பவுல் இந்த உண்மைகளுக்கும், அவர்களுடைய இரட்சிப்புக்கும் இடையே உள்ள தொடர்பைக் காட்டுகிறார். *'அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப்* பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப் படுத்துகிறேன். நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத் திருக்கிறீர்கள்.

நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக் கொண்டிருந்தால், அதினாலே இரட்சிக்கப்படுவீர்கள். மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்து வானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்தார் [1 கொரிந்தியர் 15:1–4]. வேறுவிதமாகச் சொன்னால், கிறிஸ்துவின் நற்செய்தி இந்த உங்களின் மீது நிலை நிற்கிறது. கிறிஸ்து மரித்திராவிட்டால் அவர் அடக்கம் பண்ணப் படாமல் இருந்திருந்தால், கல்லறையில் இருந்து உயிர்த்தெழாமல் இருந்திருந்தால், சுவிசேஷமே இருந்திருக்காது. அதனால் இரட்சி ப்பும் உண்டாயிருக்காது. ஆனால், இயேசு மரித்து, அடக்கம் பண்ணப் பட்டு, உயிர்த்தெழுந்தபடியால் சுவிசேஷத்திற்கான ஆதாரம் நமக்கு இருக்கிறது. இந்த சுவிசேஷம் தான் உலகையே மாற்றி விட்டது.

இப்போது நாம் நற்செய்தியின் உண்மைகளை ஒன்றன்பின் ஒன்றாக ஆழ்ந்து சிந்தித்து அது நம்மோடு எப்படி சம்மந்தப்படுகிறது என்று காண்போம்.

**கிறிஸ்துவின் மரணம்**

கிறிஸ்து மரித்தார் என்று வேதாகமம் திரும்பத் திரும்பச் சொல்கிறது. தேவனுடைய வார்த்தை சொல்வதை நாம் கவனிப்போம். *கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்*

*கடவது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்* [பிலிப்பியர் 2:5–8].' என்றாலும், தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும் படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப் பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம் [எபிரேயர் 2:9].

கிறிஸ்து யாருக்காக மரித்தார்? நாம் எபிரேயர்2 :9 ல் கவனித்தபடி அவர் எல்லோருக்காகவும் மரித்தார். அவர் பாவிகளுக்காக மரித்தார் என்று வேத வாக்கியங்கள் சொல்லுகின்றன. கவனியுங்கள் '*நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்* [ரோமர் 5:8]. ஆனால், அவர் ஏன் பாவிகளுக்காக மரித்தார்? இரட்சிப்பையும், நம்பிக்கையையும் அளிப்பதற்கு. *எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவரா யிருக்கிறார்* [1 தீமோத்தேயு 2:4].'தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்து தாமதமா யிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ள வராயிருக்கிறார்' [2 பேதுரு 3:9].

இதன் பொருள் யாரோ ஒருவர் உங்களுக்காகவும் எனக்காகவும் மரித்தார் என்பது. இதைக் குறித்து சற்று சிந்தித்துப் பாருங்கள். நாம் பாவிகளாகவும், தேவனுக்கு சத்துருக்களாகவும் இருந்து, அவருடைய கிருபைக்கும், இரக்கத்துக்கும் பாத்திரராக இல்லாத போது கிறிஸ்து நமக்காகப் பரலோகத்தை விட்டு, இந்தப் பாழாய் போன உலகத்திற்கு வந்து நாம் நித்திய ஜீவனுடைய நம்பிக்கையை பெற்றுக் கொள்ளும்படியாக நமக்காக அந்தக் கோரச் சிலுவையில் மரித்தார் [ரோமர் 5:6,7] . இயேசு கிறிஸ்து உலகத்தில் உள்ள எல்லோருக் காகவும் மரித்தார் என்பது ஆச்சரியமான காரியம் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். நாம் அவருக்கு எவ்வளவு நன்றி உள்ளவர்களாக இருக்க வேண்டும். அந்த நன்றி உணர்வு அவருக்குக் கீழ்ப்படிந்து, அவருக்கு உண்மையாய் இருக்க நம்மைத் தூண்ட வேண்டும்.

**கிறிஸ்துவின் அடக்கம்**

கிறிஸ்து சிலுவையில் மரித்த பின்பு வேத வாக்கியங்கள் இவ்விதமாகச் சொல்கின்றன. சாயங்காலமானபோது, இயேசுவுக்குச்

சீஷனும், ஐசுவரியவானுமாயிருந்த யோசேப்பு என்னும் பேர்கொண்ட அரிமத்தியா ஊரானாகிய ஒரு மனுஷன் வந்து, பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டான். அப்பொழுது, சரீரத்தைக் கொடுக்கும்படி பிலாத்து கட்டளையிட்டான். யோசேப்பு அந்தச் சரீரத்தை எடுத்து, துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டிவைத்துப் போனான். அங்கே மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறைக்கு எதிராக உட்கார்ந்திருந்தார்கள்' (மத்தேயு 27:57-61).

பல விதங்களில் பார்க்கும்போது இயேசு மரித்து அடக்கம் பண்ணப்பட்டது எந்தவித வித்தியாசத்தையும் அந்த நாட்களிலே ஏற்படுத்தவில்லை. ஏனென்றால், தினம் தினம் மனிதர்கள் மரிக்கிறார்கள் அடக்கம் பண்ணப்படுகிறார்கள், இது படைப்பின் காலந்தொட்டு உலகம் முழுவதிலும் உண்மையாய் இருக்கிறது. ஆனால், நம் கர்த்தர் மரித்த பின்பு *தாம் உயிர்த்தெழுவதாக வாக்குத்தத்தம்* பண்ணி இருந்தார். எனவேதான், அவர் இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள் மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார் யோவான்2:19) . அப்போது சீஷர்களுக்கு இயேசு சொன்ன வார்த்தைகள் புரியவில்லை புரிந்து இருந்தால் அவர்கள் அவரை விசுவாசித்து இருப்பார்கள். ஆனால், இயேசு மரித்து அடக்கம் பண்ணப்பட்ட பிறகு என்ன நடந்தது? சீஷர்கள் எல்லாம் இழந்து விட்டோம் என்று அதிர்ச்சியிலே உறைந்து போய் விட்டார்கள். அதன் பின்பு என்ன நடந்தது? இயேசு தாம் வாக்குத்தத்தம் பண்ணினபடியே உயிர்த்தெழுந்தார்.

### 3. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்

இயேசு சிலுவையில் மரித்து அந்தக் கல்லறையிலேயே இருந்திருந்தால் உலகம் அவரை மறந்து போயிருக்கும். அதாவது, இயேசு மரித்து அந்தக் கல்லறையிலேயே இருந்திருந்தால் அவர் மற்ற எந்த மனிதனையும் விட மாறுபட்டவராக இருந்திருக்க மாட்டார். ஆனால், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனிதனில் இருந்து முற்றிலும் மாறுபட்டவர், அவர் தேவனுடைய குமாரன். *அவர் தாம் மரித்த பின்பு கல்லறையில் இருந்து உயிர்த்தெழுவதாகச் சொல்லி இருந்தார், அதை அப்படியே செய்து காட்டினார்* (மத்தேயு *28*). கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் விளைவாக எல்லோருக்கும் இரட்சிப்பு உண்டாகி இருக்கிறது. அதுமாத்திரமல்லாமல், எல்லோரும் உயிர்த்தெழுவோம் என்னும் நிச்சயம் உண்டாயிருக்கிறது.

இதைக் குறித்து ஆழமாகப் பார்ப்பதற்கு முன்பாக கர்த்தருடைய உயிர்த்தெழுதல் பற்றி பேசும் சில வசனப்பகுதிகளை நாம் பார்ப்போம் மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார். [ரோமர் 1:5]. இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி,எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடேழுந்திருப்பதற்குத் தகுதியாயிருக்கும்படிக்கும், [பிலிப்பியர் 3:10] நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக 1 பேதுரு 1:3. அவர் இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும், மாசற்றதும், வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின் படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார். [1 பேதுரு 1:3,4]

இதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச் சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது. [1 பேதுரு 3:21] *மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம், மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை.* [ரோமர் 6:9] கிறிஸ்துவும் மரித்தோர் மேலும், ஜீவனுள்ளோர் மேலும் ஆண்டவராயிருக்கும் பொருட்டு, மரித்தும் எழுந்தும் பிழைத்துமிருக்கிறார் [ரோமர் 14:9].

மரித்து அடக்கம் பண்ணப்பட்டு கல்லறையில் இருந்து உயிர்த்தெழுந்த கிறிஸ்து இப்போது நம் ஆண்டவராகவும், இரட்சகராகவும் இருக்கிறார். அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் இருந்து கொண்டு நம்மை ஆளுகிறார். மேலும், அவர் ஒரு நாளிலே திரும்பி வருவதாக வாக்குத்தத்தம் செய்து இருக்கிறார் [அப்.2] யோவான் 14:1–3].

## கேள்விகள்

1. இயேசுவைப் பற்றி வேதாகமம் என்ன தெளிவாக போதிக்கிறது?
2. நற்செய்தியின் உண்மைகளை பட்டியலிடு.
3. ஏன் அவைகள் இவ்விதமாகக் குறிப்பிடப்படுகின்றன?

4. 1 கொரிந்தியர் 15:1–4 வசனங்களை வாசியுங்கள்.

5. கிறிஸ்துவின் நற்செய்தி என்பதன் பொருளை விளக்குக.

6. இயேசு கிறிஸ்து மரித்தார் என்பதை போதிக்கும் சில வசனங்களைத் தருக

7. யாருக்காக கிறிஸ்து மரித்தார்?

8. ஏன் கிறிஸ்து பாவிகளுக்காக மரித்தார்?

9. கிறிஸ்துவின் மரணம் நம் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு முக்கியத் துவம் வாய்ந்தது என்பதை விவாதி.

10. கிறிஸ்துவின் அடக்கத்தைப் பற்றி விளக்குக?

11. கிறிஸ்து தாம் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டால் என்ன செய்யப் போவதாக வாக்குத்தத்தம் செய்தார்?

12. இயேசுவின் சீஷர்கள் அவருடைய வாக்குத்தத்தைப் புரிந்து கொண்டார்களா?

13 எவ்விதத்தில் கர்த்தருடைய மரணமும், அடக்கம் பண்ணப் படுதலும் மற்றவர்களிடமிருந்து வேறுபடுகிறது?

14. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினுடைய விளைவு என்னவாயிருந்தது?

15. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் பற்றிப் பேசும் சில வசனப் பகுதிகளைக் குறிப்பிடுக?

16. இன்று கிறிஸ்து நமக்கு எந்த அளவு முக்கியமாக இருக்கிறார்?

17. கிறிஸ்து இப்போது எங்கே இருக்கிறார்?

18. கிறிஸ்து மறுபடியும் வருவாரா? அப்படியானால் எப்போது?

19. கிறிஸ்துவின் ரத்தத்தின் முக்கியதுவம் பற்றி விவாதி?

பாடம் – 3

# நற்செய்தி அழைப்பு
# The Gospel Call

இந்நாட்களில் மத உலகில் தேவன் ஒருவரை எப்படி இரட்சிப்புக்குள் அழைக்கிறார் என்பது சம்பந்தமாக பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. அவைகளில் மிக முக்கியமானவைகளை நான் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன். முதலாவது, தேவன் தங்களிடம் மெல்லிய குரலில் நேரடியாகப் பேசுவதாக போதிக் கிறவர்கள் இருக்கிறார்கள். இரண்டாவது, வேறு சிலர் இயேசு கிறிஸ்து தங்கள் சொப்பனங்களிலும், தரிசனங்களிலும் தோன்றுவதாகச் சொல் கிறார்கள். மூன்றாவது, கர்த்தர் தங்களை ஏதோ ஒரு விசேஷித்த அனுப வத்தின் மூலமாக அழைப்பதாக நம்புகிறார்கள். மேற்சொல்லப்பட்ட மூன்று விதங்களுமே மனித இனத்தை இரட்சிப்பதற்கு இதுதான் கர்த்த ருடைய வழி என்று நம்பப்படுகிறது. ஆனால், இவ்வாறு வேதாகமம் போதிக்கிறதா? மேற்சொல்லப்பட்ட உபதேசங்களை குறித்து நாம் எச் சரிக்கையாய் இருக்க வேண்டும் என்று தான் வேதாகமம் போதிக்கிறது.

நாம் முதலில் கண்டுபிடிக்க வேண்டிய காரியம் இதுதான்: இன்று தேவன் நம்மிடம் பேசுகிறாரா? அப்படி என்றால் எப்படிப் பேசுகிறார்? நாம் எபிரேயர்1:1,2 வசனங்களுக்கு நம் பக்கங்களை திருப்பினால் அது மிகவும் சுலபமானது 'பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகை யாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார். இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார் [எபிரெயர் 1:1,2].

இந்த வசனங்களின்படி இன்று தேவன் நம்மிடம் தம்முடைய குமாரன் மூலமாகத்தான் பேசுகிறார். இது மத்தேயு 17 :5 ல், இயேசு கிறிஸ்து மறுரூபமான போதும் சுட்டிக் காட்டப்பட்டது. தேவன் சொல்வதை கவனியுங்கள். *அவன் பேசுகையில், இதோ, ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள்மேல் நிழலிட்டது. இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று'* [மத்தேயு 17:5].

அடுத்த கேள்வி: இன்று தேவன் மனிதனிடம் நேரடியாகப் பேசுகிறாரா அல்லது கிறிஸ்து நேரடியாகப் பேசுகிறாரா? நாம் கீழ்க்காணும் *வசனங்களை வாசிக்கும்போது நமக்குத் தெளிவு கிடைக்கும். இந்தப் புத்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங் களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார்.*

*இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும் படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும் படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது'* (யோவான் 20:30,31). இப்போது இவைகள் ஏன் எழுதப்பட்டிருக் கின்றன? நாம் விசுவாசிக்கும் படியாக. இவைகள் எங்கே எழுதப் பட்டிருக்கின்றன? புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருக் கின்றன. எனவே, புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருக்கிறவைகளை நாம் வாசித்தால் கர்த்தருடைய சித்தத்தை அறிந்து கொள்ளலாம்.

நாம் மறுபடியும் ரோமர் 10:17 ல் இவ்விதமாக வாசிக்கிறோம் *ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலேவரும்* (ரோமர் 10:17). கேள்வி: விசுவாசம் வேறு வகையில் வருகிறதா? சிலர் அப்படி வருகிறது என்று சொல்கிறார்கள், ஆனால், வேதவாக்கியங்கள் அப்படிச் சொல்லவில்லையே. வேத வாக்கியங்கள் விசுவாசம் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதால் தான் வருகிறது என்று போதிக்கிறது. நமக்கு ஒரு வேதாகமம் தான் உண்டு, அதேபோல் ஒரு விசுவாசம் தான் உண்டு (எபேசியர் 4:5).

நமக்கு விசுவாசம் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினால் உண்டாகிறபடியினால்தான் தேவனுடைய வார்த்தையைப் படிப்பதின் முக்கியத்துவம் நமக்குப் போதிக்கப்பட்டு இருக்கிறது (2 தீமோத்தேயு 2:15). அதைப்போல் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும் படியாக போதிக்கப்பட்டிருக்கிறோம் (யோவான்5:39). வேத வாக்கியங்கள் தேவ ஆவியினால் ஏவப்பட்டதினாலும் எல்லாவற்று க்கும் அவைகள் போதுமானதாக இருக்கிறபடியினாலும் தான் வேத வாக்கியங்களுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது (2தீமோத்தேயு 3:16,17).

அடுத்ததாக, சுவிசேஷம் மண்பாண்டங்களில் வைக்கப்பட்டு இருக்கிறதாக வேத வாக்கியங்கள் சொல்கின்றன. அப்போஸ் தலனாகிய பவுல் சொல்வதைக் கேளுங்கள்: *நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்.*

*இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப் பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்.*

*இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்'*

(2 கொரிந்தியர் 4:5-7). இங்கே பவுல் என்ன சொல்கிறார்? பவுல் தன்னைப் போன்ற தனி மனிதர்களை கர்த்தர் சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு எடுத்துச் செல்வதற்காக தெரிந்து கொண்டிருப்ப தாகச் சொல்கிறார். அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள மனமாற்ற சம்பவங்களை கவனியுங்கள். தேவன் ஒரு தனி மனிதனிடம் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று சொன்னதாக ஓர் உதாரணத்தைப் பாருங்கள். உதாரணமாக, அப்போஸ் தலர் எட்டாம் அதிகாரத்தில் கர்த்தருடைய தூதன் எத்தியோப்பிய மந்திரிக்கு பிரசங்கிக்கும்படி பிலிப்பை அனுப்பினார். கேள்வி: அங்கே பிலிப்பு சமாரியா பட்டணத்து மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க விட்டு விட்டு கர்த்தருடைய தூதன் ஏன் மந்திரியிடம் செல்ல வில்லை?

தேவன் சுவிசேஷத்தை மண்பாண்டங்களில் வைத்திருக்கிற படியால் அந்த சுவிசேஷ செய்தியை மற்றவர்களுக்கு அறிவிப்பது மனிதனுடைய கடமையாக இருக்கிறது. அதுபோல், அப்போஸ்தலர் ஒன்பதாம் அதிகாரத்தில் சவுல் கர்த்தரிடம் தான் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று கேட்டபோது நீ ஒரு பட்டணத்துக்கு போ அங்கே நீ செய்ய வேண்டியது உனக்கு அறிவிக்கப்படும் என்று கர்த்தர் சொன்னார் (அப்போஸ்தலர் 22:16). கேள்வி: சவுல் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று அவனிடம் கர்த்தர் ஏன் சொல்ல வில்லை? ஏனென்றால், அப்படிச் சொல்வது கர்த்தருடைய சித்தமா யிருக்கவில்லை. இதன் காரணமாகத்தான் நாம் இன்றைய நாட்களில் கர்த்தர் நம்மிடம் நேரடியாக பேசவில்லை. மாறாக, வேத வாக்கியங்கள் மூலமாகவே பேசுகிறார் என்பதை அறிந்திருக்கிறோம். அதுபோல தேவன் சொப்பனங்கள் மூலமாக ஜனங்களுக்குத் தோன்றி அவர்கள் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று சொல்வதும் இல்லை என்பதையும் அறிந்திருக்கிறோம். ஒரு மனிதன் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று சுவிசேஷத்தில் தெள்ளத் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது. ஜனங்கள் அதை மீறி கர்த்தர் எங்களுக்கு சொப்பனத்தில் தோன்றியபடியால் இரட்சிக்கப்பட்டோம். ஒளி எங்கள் மீது வீசியதால் இரட்சிக்கப்பட்டோம் என்று சொல்வதெல்லாம் வேத வாக்கியங்களுக்கு எதிரானவைகளாகும் (கலாத்தியர்1:6-9). வேறு விதமாகச் சொன்னால் மனிதனுக்காகத் தேவன் என்ன செய்ய வேண்டுமோ அதை அவனுக்காக ஏற்கனவே செய்துவிட்டார்.

ஒரு பிரசங்கியார் சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு ஏன் இவ்வளவு அழுத்தம் கொடுக்கப்படுகிறது என்றால் சுவிசேஷமானது மண் பாண்டங்களிலே வைக்கப்பட்டு இருக்கிறது. கிறிஸ்து இவ்விதமாகச் சொன்னார். *பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன்*

*இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.* [மாற்கு 16:15,16]. மறுபடியும் நாம் இவ்விதமாக வாசிக்கிறோம். ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். அவரை விசுவாசியாத வர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக் கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப் படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக்கூறி, நற் காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே [ரோமர் 10:13-15]. கடைசியாக, நாம் எப்படிப் பிரசிங்கிக்க வேண்டும் என்று 2 தீமோத்தேயு 4:2 ல் நாம் வாசிக்கிறோம் 'சமயம் வாய்த்தாலும் வாய்க்கா விட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு. எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்தி சொல்லு. இதன் மூலம் மனிதன் மூலமாகத் தான் சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாய் இருக்கிறது என்பதைக் காண்பீர்கள். இது மிகவும் சுலபமானது.

இது உண்மையாயிருக்கிறபடியால் தான் பவுல் தெசலோனிக்கே பட்டணத்து சகோதரர்களுக்கு இவ்விதமாக எழுதினார். *'நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை* அடையும் பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்பு க்கு அவர் உங்களை அழைத்தார்' [2 தெசலோனிக்கேயர் 2:14]. பவுல் தெசலோனிக்கே பட்டணத்தாரை கர்த்தர் சுவிசேஷத்தின் மூலமாக அழைத்ததாக சொல்கிறார். அதாவது , பவுல் அந்தப் பட்டணத்தாருக்கு சுவிசேஷத்தை பிரசிங்கத்தார். அவர்கள் அதைக் கேட்டு கீழ்படிந்தார் கள். எனவே, அவர்கள் இவ்விதமாக தேவனிடத்தில் அழைக்கப் பட்டார்கள். வேறுவிதமாகச் சொன்னால், சுவிசேஷப் பிரசங்கத்தின் மூலமாக கிறிஸ்து அவர்களை இரட்சிப்புக்கு அழைத்தார் என்று சொல்ல முடியும்.

இன்று நாம் எப்படி அழைக்கப்படுகிறோம்? கிறிஸ்தவர்களாக இருக்கிற நாம் இதே சுவிசேஷத்தினால் தான் அழைக்கப்பட்டிருக் கிறோம். அதாவது, சுவிசேஷம் நமக்கு பிரசங்கிக்கப்பட்டது, நாம் அதைக் கேட்டோம் ,விசுவாசித்தோம், அதற்குக் கீழ்படிந்தோம் கர்த்தர் நம்மை இரட்சித்தார். நான் சுவி சேஷத்தை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும் போது, அதைக் கேட்டு விசுவாசிப்பவர்களுக்கு அது இரட்சிப்பை உண்டாக்குகிறது. தேவன் ஒருவரை ஒருவிதமாகவும், மற்றொருவரை வேறு விதமாகவும் அழைப்பதில்லை. மாறாக,

தேவன் எல்லோரையும் சுவிசேஷத்தின் மூலமாகத்தான் அழைக்கிறார்.

ஆம், இன்று தேவன் நம்மிடம் பேசுகிறார். ஆனால், கிறிஸ்து மூலமாகத்தான் நம்மிடம் பேசுகிறார். கிறிஸ்து நம்மிடம் பேசுகிறார் ஆனால், வார்த்தை மூலமாகத்தான் நம்மிடம் பேசுகிறார். கிறிஸ்துவுக்கு கீழ்படிகிறவர்களுக்கு மற்றவர்களிடத்தில் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் சுவிசேஷப் பிரசங்கியார் மூலமாக கிரியை செய்து தம்முடைய சித்தத்தை இழந்து போனவர்களுக்கு வெளிப்படுத்தி அவர்களைத் தம்மிடத்தில் அழைக்கிறார். (மத்தேயு 11:28-30).

நம்முடைய முதல் கடமை, சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதாகவும், இரண்டாவது கடமை, கர்த்தருக்கு கீழ்படிகிறவர்களுக்கு உதவி செய்வதாகவும் உள்ளது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்தேயு 28:19,20).

மேலும், பவுல் சொல்வதை கவனியுங்கள் :'ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார். கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப் போகாத படிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார்.

சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது' (1 கொரிந்தியர் 1:17,18).

இங்கே பவுல் சொல்ல வருகின்ற காரியம் என்னவென்றால், தான் ஞானஸ்நானம் கொடுப்பதற்காக மாத்திரம் அனுப்பப்படவில்லை. தன் முதல் கடமை சுவிசேஷத்தை பிரசிங்கிப்பது தான். ஆனால், அதன் விளைவாக ஞானஸ்நானம் பெறுவதற்கு ஜனங்கள் ஆயத்தமாய் இருந்தால் ஞானஸ்நானம் கொடுப்பதற்கு தான் ஆயத்தமாக இருப்பதாகச் சொல்கிறார்.

இதற்கு முன்பு சுவிசேஷத்தை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அப்படி இல்லை என்றால், இப்பொழுது உங்களுக்கு சுவிசேஷ அழைப்பு விடுக்கப்படுகிறது - கிறிஸ்துவினிடத்தில் வருவதற்கான அழைப்பு உங்களுக்கு விடுக்கப்படுகிறது. கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியுங்கள், அவர் உங்களை இரட்சிப்பார்.

# கேள்விகள்

1. ஒரு தனி நபரை இரட்சிப்பதற்கு தேவனால் பயன்படுத்தப் படும் விதங்களாக சிலரால் சொல்லப்படும் விதங்களை பட்டியலிடுக?
2. இன்று தேவன் மனிதனிடம் பேசுகிறாரா?
3. இன்று தேவன் மனிதனிடம் எப்படிப் பேசுகிறார்?
4. எபிரேயர் 1:1,2 வசனங்களை வாசியுங்கள்.
5. யார் மூலமாக இன்று தேவன் நம்மிடம் பேசுகிறார்?
6. மத்தேயு 17:5 யை வாசிக்கவும்.
7. இன்று தேவன் மனிதனிடம் நேரடியாகப் பேசுகிறாரா?
8. யோவான் 20:30,31 வசனங்களை வாசிக்கவும்.
9. எப்படி ஒருவருக்கு விசுவாசம் உண்டாகிறது?
10. விசுவாசம் வேறு ஏதாவது விதத்தில் வருகிறதா?
11. எத்தனை விசுவாசங்கள் உள்ளன?
12. எதற்குள் சுவிசேஷம் வைக்கப்பட்டிருக்கிறது?
13. மண்பாண்டங்கள் என்பதை விவரி?
14. அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் கர்த்தர் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்த ஒரு சுவிசேஷ பிரசங்கியார் மூலமாக கிரியை செய்த மனமாற்ற சம்பவங்கள் சிலவற்றை எழுதுக?
15. ஏன் கர்த்தர் இந்தத் தனி மனிதர்களிடம் அவர்கள் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று நேரடியாகச் சொல்லவில்லை?
16. மாற்கு 16:15,16 வசனங்களை மேற்கோள் காட்டுக?
17 இன்று நாம் கர்த்தரிடத்தில் எப்படி அழைக்கப்படுகிறோம்?
18. நாம் எப்படி சுவிசேஷத்தினால் அழைக்கப்படுகிறோம் என்பதை விளக்குக?
19. கிறிஸ்தவர்களாக நம்முடைய கடமை என்னவாக இருக்கிறது?
20. என்ன செய்யும்படியாக பவுல் அனுப்பப்பட்டார்?

பாடம்-4

# நற்செய்திக்குக் கீழ்ப்படிதல்

# Obedience To The Gospel

ஒருவரால் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய முடியுமா? முடியாதா என்று சொல்கிறவர்களும் பலர் இருக்கிறார்கள். ஆனால், வேதாகமம் அதற்கு எதிராக போதிக்கிறது. ஏற்கனவே, பலரால் கவனிக்கப்பட்டு இருக்கிற சுவிசேஷத்தில் உண்மைகள் உண்டு, நாம் அவைகளை விசுவாசிக்க வேண்டும். அதன் பின்பு சுவிசேஷத்தில் கட்டளைகள் உண்டு. அவைகளை நாம் பின்வரும் பாடங்களில் பரிசீலிப்போம். ஆனால், அவைகளுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும்.

இப்பொழுது நாம் நற்செய்தியின் உண்மைகளை மறுபடியும் வலியுறுத்துவோம். (1 கொரிந்தியர் 15:1–4) வசனங்களில் பவுல் அவைகளை கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த் தெழுதலாகப் பட்டியலிட்டு இருக்கிறார். ஆனால், இதற்கும் கீழ்ப் படிதலுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது. நாம் அவைகளைக் முழுமையாகப் பார்க்கப் போகிறோம். பவுல் ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதினவைகளை கவனியுங்கள் ‘முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்‘ (ரோமர் 6:17,18).

இங்கே இந்த ஜனங்கள் முதலில் பாவத்திற்கு அடிமைகளாக இருந்து பின்பு நீதிக்கு அடிமைகளாக மாறி இருக்கிறதை கவனியுங்கள். அப்படி என்றால் எது மாற்றத்தைக் கொண்டு வந்தது? அதற்கான பதில் மிக எளிதானதாகும். அவர்கள் தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு மனப்பூர்வமாய் கீழ்ப்படிந் தார்கள். வேறு விதமாகச் சொன்னால் அவர்கள் கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்தார்கள். இங்கே உபதேசம் என்பது கிறிஸ்து வின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலை குறிக்கிறது. ஆனால், இங்கே அந்த ஜனங்கள் தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு கீழ்படிந்திருக்கிறார்கள்.

அப்படிச் செய்தன் மூலமாக அவர்கள் தங்கள் பாவத்துக்கு மரித்து தண்ணீர் ஞானஸ்நானத்தில் கர்த்தரோடு அடக்கம் பண்ணப் பட்டார்கள். பின்பு அவர்கள் புதிதான ஜீவன் உள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படி தண்ணீரில் இருந்து எழுந்தார்கள். இந்தச்

சம்பவங்களை எல்லாம் நாம் ரோமர் ஆறாம் அதிகாரத்தின் முதல் பகுதியில் பார்க்கிறோம். இப்போது நாம் ரோமர் 6:1–6 வசனங்களைப் பார்ப்போம்1 ஆகையால், என்னசொல்லுவோம்? கிருபை பெருகும் படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமோ? கூடாதே.

**பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?**

கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனை வரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும், பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத் திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால், அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த் தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்.

நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கி றோம். (ரோமர் 6:1–6). எனவே, இந்த வசனப் பகுதியில் சொல்லப் பட்டிருக்கிற உபதேச சட்டத்திற்குத் தான் அந்த ஜனங்கள் கீழ்ப்படிந்த தாக பிற்பாடு 6:17,18 வசனங்களில் பவுல் சுட்டிக்காட்டுகிறார். இவைகளை வைத்துப் பார்க்கும் போது ஒவ்வொரு முறையும் யாரோ ஒருவர் கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படியும் போது இவ்வகை யான உபதேச சட்டத்திற்குத் தான் கீழ்ப்படிகிறார் என்பது நமக்கு தெளிவாகிறது.

நாம் தொடர்ந்து படிக்கும்போது, நற்செய்தியின் கட்டளைகள் என்ன என்பதையும், அவைகளுக்கும் கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குமான தொடர்பு என்ன என்பதையும் நாம் காண்போம். கர்த்தர் தாமே அவருடைய அப்போஸ்தலர்களுக்கு இவ்விதமாக கட்டளையிட்டார். *பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.* விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாத வனோ, ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். (மாற்கு 16:15,16).

இக்கட்டளையை மத்தேயு இவ்விதமாக பதிவு செய்கிறார். ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்தேயு 28:19,20).

இங்கே நம் கர்த்தர் சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும் என்னும் கட்டளை கொடுப்பதை நாம் கவனிக்க முடியும். அது மாத்திரமல்ல, ஒருவர் இரட்சிக்கப்பட சில கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்று நம் கர்த்தர் சொல்லுகிறார்.

நம் கர்த்தருடைய கட்டளைகளை நிறைவேற்றும் விதமாக அப்போஸ்தலர்கள் எருசலேம் பட்டணத்திலே சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள் (அப்போஸ்தலர் 2). அவர்கள் இயேசு உண்மையாகவே தேவனுடைய குமாரன் என்பதற்கான ஆதாரங்களையும், சாட்சியங்களையும் காட்டினார்கள். அவைகள் எல்லாம் ஜனங்கள் விசுவாசித்த போது அவர்கள் இப்படி ஒரு மகத்தான கேள்வியை கேட்டார்கள். இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து; சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள் (அப்போஸ்தலர் 2:37).

அதன் பின்பு அவர்களுக்கு செய்ய வேண்டியது ஒன்று இருக்கிறது என்பதைக் காட்டுவதற்காக *பேதுரு இவ்விதமாக பதிலளித்தார்' பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'* (அப்போஸ்தலர் 2:38). மேலும், அப்போஸ்தலருடைய நடபடிகள் ஒன்பதாம் அதிகாரத்தில் கர்த்தர் சவுலுக்கு தரிசனமான போது சவுல் தான் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிய விருப்பமுள்ள வராயிருந்தார். அப்போது கர்த்தர்: நீ அந்த பட்டணத்திற்கு போ நீ செய்ய வேண்டியது உனக்கு அங்கே சொல்லப்படும் என்றார். பின்பு அனனியா வந்து சவுல் செய்ய வேண்டியதை அவருக்கு அறிவித்தார் (அப்போஸ்தலர்22:16).

அப்போஸ்தலர் எட்டாம் அதிகாரத்தில் பிலிப்பு எத்தியோப்பிய மந்திரிக்கு கிறிஸ்துவைப் பிரசங்கித்தார். அப்போது அந்த மந்திரி ஞானஸ்நானம் பெற விரும்பினார். ஆனால், இதற்குப் பின்வரும் உரையாடலை கவனியுங்கள்: அதற்குப் பிலிப்பு; நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன்; இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று

விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும், மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம்கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான். [அப்போஸ்தலர் 8:37–39].

இப்போது சுவிசேஷத்தின் கட்டளைகள் என்ன? முதலில், ஒருவர் பிரசங்கிக்கப்படும் சுவிசேஷத்தை கேள்விப்படுவது அவசியமாய் இருக்கிறது. *இரண்டாவது,* கேட்ட சுவிசேஷத்தை விசுவாசிப்பது அவசியமாய் இருக்கிறது. *மூன்றாவது,* பழைய பாவங்களிலிருந்து மனந்திரும்புவது அவசியமாய் இருக்கிறது. *நான்காவது,* ஒருவர் தன் வாயினாலே இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்வது அவசியமாய் இருக்கிறது. *ஐந்தாவது* ஒருவர் பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுவது அவசியமாய் இருக்கிறது.

நற்செய்தியின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது என்னும் செயல் முறையில் ஒருவர் தன் பாவத்துக்கு மரிக்கிறார். அதாவது, இந்த நபர் சுவிசேஷத்தைக் கேட்டு அதை விசுவாசித்து தன் பழைய பாவங்களில் இருந்து மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, பின்பு தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் பெறுகிறார். தண்ணீரில் மூழ்குவது ஒருவர் பாவத்துக்கு மரித்து அடக்கம் பண்ணப்படுவதை குறிக்கிறது. நாம் ஏற்கனவே எத்தியோப்பிய மந்திரியும், பிலிப்பும் பாவத்துக்கு மரித்து, அடக்கம் பண்ணப்படும்படி தண்ணீரில் இறங்கினார்கள் என்று பார்த்தோம். கொலோசெயர் 2:12 மற்றும் ரோமர் 6:4. ஞானஸ்நானம் என்பது தண்ணீரில் அடக்கம் பண்ணப்படுவதைத் தான் குறிக்கிறது என்று சொல்லுகின்றன. அதன் பின்பு உயிர்த்தெழுதல் அல்லது கிறிஸ்துவுடனே கூட எழுந்திருத்தல். அப்போஸ்தலர் எட்டாம் அதிகாரம் பிலிப்பும் எத்தியோப்பிய மந்திரியும் தண்ணீரிலிருந்து கரையேறினது பற்றி பேசுகிறது. ரோமர் ஆறாம் அதிகாரம் கூட அடக்கம் பண்ணப்பட்டு, புதிதான ஜீவன் உள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படி எழுந்திருப்பது பற்றி பேசுகிறது.

யோவான் 3:3–5ல் வசனங்களில் கிறிஸ்து ஜலத்தினாலும், ,ஆவினாலும் பிறப்பது பற்றி பேசுகிறார். இது ஏற்கனவே நாம் பார்த்த காரியத்தை மறுபடியும் பார்ப்பது போன்றது தான். ஒருவர் தன் பாவத்துக்காக தண்ணீரில் அடக்கம் பண்ணப்படும் போது அவர் அங்கேயே அப்படியே இருந்து விடுவதில்லை. அவர் தண்ணீரில் இருந்து எழுந்திருந்து வெளியே வருகிறார். இது உயிர்த்தெழுதலைக்

குறிக்கிறது. இப்படி தண்ணீரில் இருந்து வெளியேறிய ஒருவர் அவர் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாய் இருக்கிறபடியால் புதிதான ஜீவன் உள்ளவராய் நடந்து கொள்கிறார் [11 கொரிந்தியர் 5:17].

கட்டளைகள் கீழ்ப்படிய வேண்டியவைகளாய் இருக்கிறது. கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்படிகிறவர்கள் நிச்சயமாய் மிகுதியான பலனை அடைவார்கள். ஆனால், சுவிசேஷத்தின் கட்டளைகளில் ஒன்றைக் கூட நாம் தவிர்க்க முடியாது. அதேபோல் முக்கிய மற்றதாகவும் கருத முடியாது. ஒருவர் ஒவ்வொரு கட்டளைக்கும் கீழ்ப்படிந்த பிறகு நம் கர்த்தர் அந்த நபரை இரட்சித்து, தம்முடைய சபையிலே சேர்த்து, நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையுடன் அந்த நபருக்கு எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் அளிக்கிறார்.

சுவிசேஷம் எல்லோருக்குமானதாக இருந்தாலும் கூட, இரட்சிப்பைப் பெற விரும்பும் எல்லோரும் அதற்குக் கீழ்படிய வேண்டியதாக இருந்தாலும் கூட, எல்லோரும் சுவிசேஷத்திற்கு கீழ்படிவதில்லை. இதைக் குறித்து பவுல் இவ்விதமாக புலம்புகிறார்.' ஆனாலும், சுவிசேஷத்துக்கு எல்லாரும் கீழ்ப்படியவில்லை. அதைக் குறித்து ஏசாயா: கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார் என்று சொல்லுகிறான் [ரோமர் 10:16].

இவ்வசனத்திலேயே ஒருவர் இரட்சிக்கப்பட கீழ்ப்படிய வேண்டும் என்பது உட்பொருளாக சொல்லப்பட்டுள்ளது. ஆனால், கீழ்ப்படியாத அவர்களின் நிலை என்ன? தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்.

அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது... [2 தெசலோனிக்கேயர் 1:7-9]. எனவே, இந்த வசனங்களின்படி தேவனை அறியாமல் இருப்பதும் சுவிசேஷத்துக்கு கீழ்ப்படியாமல் இருப்பதும் தேவகோபாக்கினைக்கு வழிவகுக்கும் என்று நாம் பார்க்கிறோம். சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகிறவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்றும், விசுவாசியாதவர்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவார்கள் என்றும் இயேசு கிறிஸ்து சொன்னார் [மாற்கு 16:16]. இரட்சிப்பு குறித்துக் கவலையற்று இருப்பவர்களுக்கு தப்பித்துக் கொள்ளும்படியான வழியே இல்லை என்று தான் மேற்சொல்லப்பட்ட வசனங்கள் வலியுறுத்துகின்றன [எபிரெயர் 2:2,3].

# கேள்விகள்

1. ஒருவர் நற்செய்திக்குக் கீழ்ப்படிய முடியுமா?
2. நற்செய்தியின் உண்மைகளைப் பட்டியலிடுக?
3. ரோமர் 6:17,18 வசனங்களை வாசிக்கவும்
4. ரோமாபுரியார் எதற்கு கீழ்ப்படிந்தார்கள்?
5. எவ்வகையான உபதேச சட்டத்திற்கு அவர்கள் கீழ்ப் படிந்தார்கள்?
6. அவர்கள் தங்கள் கீழ்ப்படிதல் மூலமாக கர்த்தருடைய மரணம் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலை எப்படி காட்டினார்கள்?
7. (ரோமர் 6:1–6) வசனப் பகுதி எதை போதிக்கிறது?
8. மாற்கு 16:15,16 மற்றும் மத்தேயு28:19,20 வசனங்களை மேற்கோள் காட்டுக.
9. ஏன் சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும் என்று நம் கர்த்தர் கட்டளையிட்டார்?
10. ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டும் என்றால் என்னென்ன கட்டளைகளுக்குக் கீழ்படிய வேண்டும் என்று குறிப்பிடுக.
11. அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் அப்போஸ்தலர்கள் எதை பிரசங்கித்தார்கள் என்பதைக் கூறுக
12. அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:38ன் முக்கியத்துவத்தை எழுதுக?
13. பிலிப்பு எத்தியோப்பிய மந்திரிக்கு எதை பிரசங்கித்தார்?
14. சுவிசேஷத்தின் கட்டளைகளைப் பட்டியலிடுக?
15. எப்படி சுவிசேஷத்தின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிவது கர்த்தருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலோடு தொடர்புபடுத்தப்படுகிறது?
16. எவ்விதத்தில் யோவான் 3:3–5 இவை எல்லாவற்றோடும் பொருந்துகிறது?
17. எப்போது நம் கர்த்தர் ஒருவரை இரட்சிக்கிறார்?
18. யார் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வேண்டும்?
19. சுவிசேஷத்துக்கு கீழ்ப்படியாதவர்களுக்கு என்ன நடக்கும்?
20. அறியாமையின் காரணமாக தேவன் ஒருவரை மன்னித்து விடுவாரா?

பாடம் – 5

# நற்செய்தியைக் கேள்விப்படுதல்
# Hearing the Gospel

ஒருவர் என்ன கேட்கிறார் என்பது தான் அவர் எதை விசுவாசிக்கிறார் என்பதைத் தீர்மானிக்கும். ஒருவர் ஆவிக்குரிய தவறை போதிக்கக் கேட்டால், அவர் சத்தியத்தை கற்றுக்கொள்ள முயற்சி எடுக்காமலும், வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்காமலும் இருந்தால், அந்த நபர் தவறை நம்புவதற்கு வாய்ப்புகள் உண்டு. அதே நேரத்தில் அந்த நபர் சத்தியத்தைக் கேள்விப்பட்டால், அவர் சத்தியத்தைத் விசுவாசிப்பதற்குத் தான் வாய்ப்பு அதிகம்.'ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்' [ரோமர் 10:17]. இங்கே கேள்விப்படுதலுக்குத் தான் அதிக அழுத்தம் கொடுக்கப்படுகிறது என்பதை கவனியுங்கள்.

ஆனால், இங்கே ஒருவர் மனதில் எழும்பும் கேள்வி என்னவென்றால், தேவனுடைய வார்த்தையினால்தான் தனக்கு விசுவாசமுண்டானது என்பதை எப்படி நிச்சயப்படுத்துவது? தேவனுடைய நாமத்தால் இந்த உலகத்தில் அநேக காரியங்கள் போதிக்கப்படுகின்றன. அவைகளுள் பெரும்பாலானவை முரண்பாடு உள்ளவைகளாக இருக்கின்றன. அதன் காரணமாக உலகத்தில் குழப்பங்களும், பிரிவினைகளும் காணப்படுகின்றன. மேலும், ஒருவர் தான் உண்மையாகவே சத்தியத்தை கேட்டிருக்கிறார் என்பதை எப்படி நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும்? அதற்கான மிகச் சிறந்த வழி வேதாகமத்திற்கு திரும்பிப் போவது தான். ஒருவர் எவ்வளவு தான் அன்பும், மரியாதையும் ஒரு பிரசங்கியார் மீது வைத்திருந்தாலும் கூட, அந்தப் பிரசங்கியாரின் பிரசங்கத்தை இறுதியான ஒன்றாக ஏற்றுக் கொள்ளக் கூடாது. நம் ஆத்துமாக்கள் விலையேறப் பெற்றவைகளாய் இருக்கிறபடியால், நம் விசுவாசத்திற்கும், இரட்சிப்பிற்கும் ஆதாரமாக வெறுமனே மனிதர்களுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. மாறாக, நாம் சத்தியத்தின் ஆதாரத்திற்குச் செல்ல வேண்டும். அதாவது, நாம் வேதாகமத்திற்குச் செல்ல வேண்டும். நாம் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து, நாம் சரியான பாதையில் இருக்கிறோமா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்படி நாம் சரியான பாதையில் இல்லை என்றால், நம்மை நாமே திருத்திக் கொள்ள வேண்டும். 'வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்: அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும்

அவைகளே' (யோவான் 5:39) என்று இயேசு கிறிஸ்து சொன்னார். அதன் பின்பு பவுலின் பிரசங்கத்தைக் கேட்ட மக்கள் இவ்விதமாகச் சொன்னார்கள்.'அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால் தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலி களாயிருந்தார்கள்'(அப்போஸ்தலர் 17:11). இப்போது இதைக் குறித்து சற்று சிந்தித்துப் பாருங்கள். இந்த ஜனங்கள் பவுல் தங்களுக்கு பிரசங்கித்த பிறகு கூட, காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்திருக்கிறார்கள். பவுலின் நாட் களிலேயே ஜனங்கள் வேத வாக்கியங்களை ஆராய்ந்து இருக்கிறார்கள் என்றால், நவீன பிரசங்கியார்களின் பிரசங்கங்களை கேட்ட பிறகு நாம் எவ்வளவு ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஒவ்வொருவரும் இப்படிச் செய்தால் அருமையாக இருக்கும் அல்லவா? ஒவ்வொருவரும் இப்படி செய்தால், மத சம்மந்தமான பிழைகளும் வெகுவாகக் குறையும், கள்ளப் போதகர்களும் காணாமல் போவார்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயு என்னும் பெயர் கொண்ட இளம் பிரசங்கியாரை தேவனுடைய வார்த்தையைப் படிக்கும்படி புத்திமதி சொல்கிறார்.' நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு' (2 தீமோத்தேயு 2:15). ஏன் அநேக ஜனங்கள் தேவனுடைய வார்த்தையை அறியாமல் இருக்கிறார்கள்? ஏனென்றால் அவர்கள் தேவனுடைய வார்த்தையைப் படிப்பதில்லை. மதச்சந்தமான காரியங்களில் ஏன் அநேகர் வஞ்சிக்கப்படுகிறார்கள்? ஏனென்றால், எது சரி, எது தவறு என்ற வித்தியாசத்தை அறிந்து கொள்ள அவர்கள் தேவனுடைய வார்த்தைகளைப் படிப்பதில்லை. ஏன் அநேக ஜனங்கள் மோசேயின் பிரமாணத்தை குறித்தும், கிறிஸ்துவின் பிரமாணத்தை குறித்தும் குழம்பிக் கொள்கிறார்கள்? அவர்கள் தேவனுடைய வார்த்தையைப் படிக்காத படியினால், சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்துப் பார்க்க முடியவில்லை.

யோவான் தன்னுடைய நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு இவ்விதமாக புத்திமதி சொல்கிறார். பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவை களோ என்று சோதித்தறியுங்கள்(1 யோவான் 4:1). இங்கே அப்போஸ் தலன் எல்லா ஆவிகளையும் அல்லது எல்லா பிரசங்கியார்களையும் நம்ப வேண்டாம் என்று கூறுகிறார். ஏனென்றால், உலகத்தில்

அநேக d கள்ள தீர்க்கதரிசிகள் அல்லது பிரசங்கியார்கள் தோன்றியிருக்கிறார்கள் என்று கூறுகிறார். d யார் இவர்களுள் கள்ள தீர்க்கதரிசிகள், எத்தனை கள்ளப்பேதகர்கள் என்பதை நாம் எப்படி அறிந்து கொள்வது? இங்கே பவுல் நாம் அவர்களை சோதித்தறிய வேண்டும் என்று சொல்கிறார். நாம் இதை எப்படிச் செய்ய முடியும்? நாம் அவர்களுடைய பிரசங்கத்தையும், போதகத்தையும் தேவனுடைய வார்த்தையோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இரதத்தில் பயணித்துக் கொண்டிருந்த எத்தியோப்பிய மந்திரியை பார்த்த பிலிப்பு அவர் வேத வாக்கியங்களை வாசித்துக் கொண்டிருந்ததைக்கண்டார். 'அப்பொழுது பிலிப்பு பேசத்தொடங்கி, இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக்குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான்' (அப்போஸ்தலர் 8:35). பிலிப்பு தேவனுடைய வார்த்தையை பிரசங்கித்தன் விளைவாக, எத்தியோப்பிய மந்திரியின் இருதயத்தில் உண்மையான விசுவாசம உண்டாகி, அவர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார். அப்போஸ்தலர் 8:5 ல் பிலிப்பு சமாரியாவுக்குப் போய் அங்குள்ளவர்களுக்கு கிறிஸ்துவைப் பிரசங்கித்தார் என்று வாசிக்கிறோம். பின்பு அப்போஸ்தலர் 8 :25 ல் பேதுருவும், யோவானும் சமாரியாவுக்குப் போய் சமாரியாவில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து எருசலேமுக்குத் திரும்பி வந்தார்கள் என்று வாசிக்கிறோம்.

நாம் இரண்டு விதங்களில் சுவிசேஷத்தைக் கேட்க முடியும். முதலாவதாக, நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி, நாமாகவே தேவனுடைய வார்த்தையைப் படித்துக் கொள்ள முடியும். அப்படிச்செய்வதன் மூலமாக, கிறிஸ்து, பவுல், பேதுரு போன்றோரின் வார்த்தைகளை பரிசுத்த பக்கங்களில் நாம் வாசிக்க முடியும். இந்த நவீன காலக்கட்டத்தில் கூட, வாசிக்க முடியாதவர்கள் பலர் இருக்கிறபடியால் அவர்களுக்கு தேவனுடைய வார்த்தையைப் போதிக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது. இக்காரியத்தில் இரண்டு பேர் ஈடுபடுத்தப்படுகிறார்கள், ஒருவர் பிரசங்கிப்பவர், மற்றொருவர் கேட்கிறவர். இதன் காரணமாக தேவனுடைய வார்த்தையை பிரசிங்கிப்பவர் மீது அதிக பொறுப்புகள் வைக்கப்படுகின்றன. அவர் வேதாகமத்திற்கு உண்மையாக இருக்க வேண்டும். அவர் வேதாகமத்தை அஜாக்கிரதையாகவோ, தந்திரமாகவோ பயன்படுத்தி ஜனங்களை தவறான வழியில் நடத்தினால், அவர் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும்.' அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய

இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக் கிறார்கள்'[ரோமர் 16:18].

நம் ஆண்டவர் அப்போஸ்தலர்களை எந்த சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி உலகெங்கும் போகும்படி கட்டளையிட்டாரோ, அந்த சுவிசேஷத்தை ஒட்டுமொத்த மனித இனம் கேட்பது அவசியமாய் இருக்கிறது. [மாற்கு 16:15]. ஏன் அது அவசியமாய் இருக்கிறது? மனித இனத்தால் தேவனுடைய வார்த்தையாகிய சுவிசேஷத்தைக் கேட்டு, அதை விசுவாசித்து, அதற்குக் கீழ்படிந்தால் தான் இரட்சிக்கப்பட முடியும். பவுல் தீமோத்தேயுவுக்கு இவ்விதமாக எழுதுகிறார். 'உன்னைக் குறித்தும், உபதேசத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய் வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்ளுவாய்[1 தீமோத்தேயு 4:16]. சுவிசேஷத்தைக் கேள்விப்படுவதினால் ஒருவர் எப்படி இரட்சிக்கப்பட முடியும்? நாம் ஏற்கனவே பார்த்தபடி, விசுவாசமானது தேவனுடைய வார்த்தையை கேட்பதினால் உண்டாகிறது. அது கீழ்ப்படிதலுக்கு வழி வகுத்து, கீழ்ப்படிதல் இரட்சிப்பைக் கொண்டு வருகிறது. மிகத் துல்லியமாக இதைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறார்.'விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்'[எபிரேயர் 11:6].

மறுரூப மலையில் தேவன் தம்முடைய குமாரன் பற்றி இவ்விதமாகச் சொன்னார். 'பிதாவே, உலகம் உண்டாகிறதற்குன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்'[யோவான் 17:5]. தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து மூலமாக எப்படி பேசுகிறார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். 'பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக் களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார். இவரைச் சர்வத் துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங் களையும் உண்டாக்கினார் '[எபிரேயர் 1:2]. கடைசியாக, வார்த்தை இயேசு கிறிஸ்து என்பதை நாம் வாசிக்கிறோம் [யோவான்1:1,2]. எனவே தான், நம்மை இரட்சிக்க இவ்வுலகத்திற்கு வந்த இயேசு கிறிஸ்துவுக்கு செவி கொடுப்பதும், அவருக்குக் கீழ்ப்படிவதும்

அவசியமாய் இருக்கிறது. கர்த்தருடைய வார்த்தைகளோடு ஒப்பிடும் போது மனிதனுடைய அபிப்ராயங்கள், உபதேசங்கள் போன்றவைகள் எல்லாம் ஒன்றுக்கும் உதவாதவைகளாக இருக்கின்றன.

இறுதியாக, யாக்கோபு இவ்விதமாக எழுதுகிறார். அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர் களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்' என்று (யாக்கோபு 1:22). நாம் தேவனுடைய வார்த்தைகளை கேட்பது முக்கியமானதாக இருந்தாலும் கூட, அதோடு நின்று விட்டால் நாம் இழந்து போவதற்கு வாய்ப்புகள் உண்டு. நாம் சத்தியத்திற்கு கீழ்ப்படியும் வரை அது நம்மை இரட்சிக்காது. எனவே தான், நாம் திருவசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதன்படி செய்கிறவர்களாயும் இருக்க வேண்டும். இதை நாம் எப்போதும் நன்றாய் நினைவில் கொள்ள வேண்டும்.

## கேள்விகள்

1. ஒருவர் எதை விசுவாசிக்கிறார் என்பதை பொதுவாக எது தீர்மானிக்கிறது?
2. விசுவாசம் எப்படி உண்டாகிறது?
3. விசுவாசம் தேவனுடைய வார்த்தையினால் தான் உண்டாகிறது என்பதை ஒருவர் எப்படி நிச்சயித்துக் கொள்ள முடியும்?
4. ஒருவர் மனிதனுடைய உபதேசத்தை இறுதி வாக்காக ஏற்றுக் கொள்ளவே கூடாதா?
5. யோவான் 5:39யை வாசிக்கவும்
6. ஏன் பெரேயா பட்டணத்தார் தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்?
7. மத சம்பந்தமான பிழைகளை எப்படி அகற்ற முடியும்?
8. வேத வாக்கியங்களைப் படிப்பது ஏன் அவசியமாய் இருக்கிறது?
9. தேவனுடைய வார்த்தையைக் குறித்த மனிதனுடைய அறியாமையின் விளைவுகள் சிலவற்றை எழுதுக?
10. I யோவான்4:1 எதைப் போதிக்கிறது?
11. பிலிப்பு எத்தியோப்பிய மந்திரியிடம் என்ன பிரசங்கித்தார் என்பதை விளக்குக?

12. ஏன் பிலிப்பு சமாரியாவுக்குப் போனார்?

13. எந்த இரண்டு வழிகளில் ஒருவர் சுவிசேஷத்தை கேட்கலாம்?

14. ஒரு பிரசங்கயார் மீது நம் கர்த்தர் ஏதாவது பொறுப்பை வைக்கிறாரா?

15. நாம் யாருக்குச் செவி கொடுக்க வேண்டும்?

16. இன்றைய நாட்களில் கிறிஸ்து நம்மிடம் எப்படிப் பேசுகிறார்?

17. நாம் எப்படிப்பட்ட கேட்கிறவர்களாய் இருக்க வேண்டும்?

18. எப்போது சத்தியம் நம்மை இரட்சிக்கிறது?

பாடம் – 6

# தேவனிடத்தில் விசுவாசம்
# Faith In God

எபிரெய ஆசிரியர் விசுவாசத்திற்கு இவ்விதமாக விளக்கம் கொடுக்கிறார். *விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது* (எபிரேயர் 11:1). விசுவாசம் என்னும் வார்த்தை கீழ்ப்படிதலை உண்டாக்கும் நம்பிக்கை மற்றும் ஏற்றுக்கொள்ளுதல் போன்றவைகளுக்கும் சொல்லப்படும். விசுவாசம் என்னும் அஸ்திபாரத்தின் மீதுதான் ஒருவர் கிறிஸ்தவரா கிறார். மேலும், விசுவாசத்தின் காரணமாகவே அந்த நபர் கிறிஸ்தவராக தொடர்ந்து நிலைத்திருக்கிறார்.

*மறுபடியும் எபிரெய ஆசிரியர் இவ்விதமாகச் சொல்லுகிறார் 'விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம். ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் (எபிரேயர் 11:6).*

இங்கே தேவனை விசுவாசிப்பதில் இரண்டு காரியங்கள் ஈடுபடுத்தப்பட்டிருப்பதை கவனியுங்கள். முதலில், தேவன் இருக் கிறார் என்பதை ஒருவர் விசுவாசிக்க வேண்டும். இரண்டாவது, தேவன் தம்மைத் தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறார் என்பதையும் விசுவாசிக்க வேண்டும். இவைகளில் குறைவுகள் இருந்தால் ஒருவருடைய விசுவாசம் எப்படி ஏற்றுக் கொள்ளப்படும்?

நம்மைச் சுற்றிலும் இருக்கிற எல்லாவற்றையும் நாம் உற்று நோக்கிப் பார்க்கும்போது, பரலோகத்தில் தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதை நாம் விசுவாசிக்கிறோம். நாம் வானங்களை, மிருகங்களை, பூமியை, மனித இனத்தைப் பார்க்கிறோம். இவைகள் எல்லாம் சிருஷ் டிகர் ஒருவர் இருக்கிறார் என்பதைத்தான் சுட்டிக் காட்டுகின்றன. சங்கீதக்காரனாகிய தாவீது இவ்விதமாக அறிவிக்கிறார்' *வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது.* (சங்கீதம் 19:1). தேவன் இருக்கிறார் என்பதை ஒரு முட்டாள் மாத்திரம் தான் மறுப்பான் (சங்கீதம்14:1).

ஆனால், தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதை மாத்திரம் விசுவாசிப்பது போதுமானதல்ல. இயேசு கிறிஸ்து அவருடைய குமாரன் என்பதையும் நாம் விசுவாசிக்க வேண்டும். இயேசு தாமே இவ்விதமாகச் சொன்னார். *உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக, தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாச மாயிருங்கள்' (யோவான் 14:1).*

இதே கருத்து பற்றி போதிக்கும் ஒரு சில வசனங்களும் உண்டு. *'தேவன், தம்முடைய ஒரேபேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்' (யோவான் 3:16).' அப்பொழுது இயேசு சத்தமிட்டு: என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் என்னிடத்தில் அல்ல, என்னை அனுப்பினவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறான்'* [யோவான் 12:44] என்றார்.

ஆனால், கிறிஸ்துவை விசுவாசிக்காதவர்களைப் பற்றி வேத வாக்கியங்கள் என்ன சொல்கின்றன? நம்ம ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ; *'அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்: விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான* குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று' [யோவான் 3:18] என்று சொன்னார். அதுபோல் நம் ஆண்டவர் இவ்விதமாகவும் சொன்னார் *'குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்: குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றான்'* [யோவான் 3:36].

ஆகையால், நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன், நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்' [யோவான் 8:24]. மேற்சொல்லப்பட்ட வசனங்களில் இருந்து கர்த்தரை விசுவாசிப்பதினால் வரும் ஆசீர்வாதங்களை நிச்சயமாக நாம் காண்கிறோம். ஆனால், அதே நேரத்தில் அவரை விசுவாசிக்காமல் இருக்கத் தெரிந்து கொள்பவர்கள் மீது வரும் சாபங்களையும் தண்டனைகளையும் நம்மால் காண முடியும்.

ஆனால், நாம் எந்த அளவுக்கு தேவனையும் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவையும் விசுவாசிக்க வேண்டும்? நாம் மனதளவில் தேவனை விசுவாசிக்கலாம். ஆனால் இது போதுமானதா? நாம் நம் விசுவாசத்தை வெளியே காட்ட வேண்டும் அல்லது நிரூபிக்க வேண்டும் என்று தேவனுடைய வார்த்தை நமக்குச் சொல்கிறது. உதாரணமாக, கிறிஸ்து இவ்விதமாகச் சொன்னார். *என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன?* [லூக்கா 6:46].21 பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. [மத்தேயு 7:21]

அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை, அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்'(மத்தேயு 7:21−23).). இங்கே இந்த ஜனங்கள் விசுவாசிகளாக இருந்திருக்கிறார்கள். மேலும், இவர்கள் பக்திக் காரியங்களில் ஈடுபட்டிருந்திருக்கிறார்கள். ஆனால், அங்கே என்ன தவறு நடந்திருக்கிறது? பரலோகத்தில் இருக்கிற பிதாவின் சித்தத்தின்படி அவர்கள் செய்யவில்லை.

விசுவாசம் என்பது கிறிஸ்துவின் சுவிசேஷ கட்டளைகளில் ஒன்றாய் இருக்கிறது. இந்த விசுவாசம் தேவனுடைய வார்த்தையை கேட்பதினால் உண்டாகிறது (ரோமர்10:17). இதுதான் ஒருவரை தன் பாவங்களிலிருந்து மனம் திரும்ப வழி வகுக்கிறது. அதுபோல் கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்ய வைக்கிறது. மேலும், ஒருவரை இது பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறத் தூண்டுகிறது. இவைகளை நாம் பின்வரும் பாடங்களில் ஒவ்வொன்றாகப் பார்ப்போம். இந்த விசுவாசம் இல்லை என்றால் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவே முடியாது. உண்மையான விசுவாசம் உண்டானால் கீழ்ப்படிதல் தானாகவே பின் தொடரும். அது கர்த்தருடைய கட்டளைகளைக் கேள்வி கேட்காது. மாறாக, அதற்கு இணங்கிப்போகும். உண்மையான விசுவாசம் கிறிஸ்துவின் போதனைகளை நிராகரிக்காது. மாறாக, அதற்குக் கீழ்ப்படியும். *விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்* (மாற்கு 16:16) என்று இயேசு கிறிஸ்து சொன்னார். ஒருவர் விசுவாசிக்கவில்லை என்றால் கர்த்தருக்கு கீழ்ப்படிய மாட்டார் என்பது இயற்கை தானே. அதே நேரத்தில் ஒருவர் விசுவாசித்தால் அவர் கிறிஸ்துவுக்குக்கீழ்படிவார். அதன் பொருள் அவர் ஞானஸ்நானம் பெறுவார் என்பதாக இருக்கிறது. இது மிகவும் எளிதானது அப்படித்தானே? அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள எல்லா மனமாற்ற சம்பவங்களிலும் ஒரு பாவிக்கு பிரசங்கிக்க அங்கே ஒரு பிரசங்கியார் இருப்பதை நம்மால் காண முடிகிறது. எனவே, ஒருவர் சுவிசேஷத்தை கேட்கிறார், அதை விசுவாசிக்கிறார், பாவங்களிலிருந்து மனந்திரும்புகிறார், கிறிஸ்துவை அறிக்கையிடுகிறார், பின்பு பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெறுகிறார். ஒரு தனிநபர் சுவிசேஷத்தை கேள்விப்பட்டு அதை விசுவாசித்துவிட்டால் மீதமுள்ள மற்ற காரியங்களில் எந்த பிரச்சனையும் இருக்காது. ஏனென்றால், அந்த தனி நபர் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிய இப்போது ஆயத்தமாய் இருக்கிறார்.

ஒட்டுமொத்த காரியமும் ஒருவருடைய விசுவாசத்தைத் தான் சார்ந்து இருக்கிறது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் அவிசுவாசிகள் கூட்டம் ஒன்றைப் பார்க்கிறோம். அதில் சிலர் இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட போது உடன் இருந்தவர்கள். பேதுருவும், மற்ற அப்போஸ்தலர்களும் சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள். மேலும், அப்போஸ்தலர்கள் அந்த அவிசுவாசிகளுக்கு கிறிஸ்து தான் மெய்யான தேவனுடைய குமாரன் என்பதையும் காட்டினார்கள். அதன் விளைவாகத்தான் அந்த விசுவாசிகள் அப்போஸ்தலர்களைப் பார்த்து *நாங்கள் என்ன செய்ய வேண்டும்?* என்று கேட்டார்கள் [அப்போஸ்தலர்2:37]. வேறு விதமாக சொன்னால், இப்போது இவர்கள் தங்கள் விசுவாசத்தின்படி செயல்பட ஆயத்தமாகி விட்டார்கள். அதன் காரணமாக சுமார் 3000 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள் [அப். 2:41]. பிலிப்பு அவர்களுக்கு சுவிசேஷத்தை பிரசிங்கத்தார். அநேகர் அதை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றார்கள். [அப்போஸ்தலர் 8:12]. அதுபோல் பிலிப்பு எத்தியோப்பிய மந்திரிக்கு கிறிஸ்துவைப் பிரசங்கித்தபோது அந்த மந்திரி அந்த வார்த்தைகளை விசுவாசித்துச் செய்யப்பட வேண்டியது அவனுக்கு அறிவிக்கப்பட்ட போது, அதற்கு கீழ்படிந்தபடியால் தான் சந்தோஷத்தோடு தன் வழியே போனான் [அப்.8:26–39].

அப்போஸ்தலர் பதினாறாம் அதிகாரத்தில் பவுலும், சீலாவும் அந்த சிறைச்சாலைக்காரன் இரட்சிக்கப்பட அவன் விசுவாசிக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால், அந்த சிறைச்சாலைக்காரன் ஒரு அவிசுவாசியாக இருந்தபடியால் பவுலும், சீலாவும் தேவனுடைய வார்த்தையை அவனுக்கும் அவன் வீட்டார் அனைவருக்கும் பிரசங்கித்தார்கள். அதன் விளைவாக, அவன் அவர்களை அழைத்துக் கொண்டு போய் அவருடைய காயங்களைக் கழுவினான். அந்த சிறைச்சாலைக்காரனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள் [அப்.16:30–33]. எல்லா மனமாற்ற சம்பவங்களிலும் காரியங்கள் இவ்விதமாகத் தான் நடந்திருக்கிறது.

கடைசியாக, வேத வாக்கியங்கள் ஒரே விசுவாசம் இருப்பதாக போதிக்கின்றன[எபேசியர் 4:5]. ஒரே ஒரு வேதாகமம் தான் உண்டு எல்லோரும் அதை ஏற்றுக்கொண்டு, அதை விசுவாசித்தால் நம் எல்லோருக்கும் ஒரே விதமான விசுவாசம் தான் இருக்கும். அந்த ஒரே விசுவாசம் நம் எல்லோரையும் ஒரே காரியத்தைச் செய்ய வழிவகுக்கும் அதாவது, கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, அவருக்கு மரண பரியந்தம் உண்மை உள்ளவர்களாய் இருக்க அது வழிவகுக்கும்.

## கேள்விகள்

1. விசுவாசம் என்றால் என்ன?
2. விசுவாசம் அவசியமானதா? எந்த அளவுக்கு அவசியம்?
3. எபிரெயர் 11:6யை வாசித்து அதை விளக்கவும்.
4. ஏன் ஒருவர் தேவனை விசுவாசிக்க வேண்டும்?
5. தேவன் ஒருவர் உண்டு என்று விசுவாசிப்பது போதுமானதா?
6. நாம் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்க வேண்டும் என்று போதிக்கும் சில வசனங்களைத் தருக
7. கிறிஸ்துவை விசுவாசியாதவர்களைக் குறித்து வேத வாக்கியங்கள் என்ன சொல்கின்றன?
8. ஒருவர் கிறிஸ்துவை எந்த அளவுக்கு விசுவாசிக்க வேண்டும்?
9. கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று மனதளவில் ஏற்றுக் கொள்வது போதுமானதா? ஏன் போதுமானதல்ல?
10. கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதை வலியுறுத்தும் சில வசனப் பகுதிகளைக் குறிப்பிடுக
11. பக்தியுள்ள எல்லோரும் இரட்சிக்கப்படுவார்களா?
12. விசுவாசத்தினாலே மாத்திரம் என்னும் உபதேசம் என்பது என்ன?
13. யாக்கோபு இரண்டாம் அதிகாரத்தை வாசித்து சுருக்கமாக விவாதி.
14. யோவான் 3:16 விசுவாசத்தினாலே மாத்திரம் தான் என்று போதிக்கிறதா?
15. ஒருவர் உண்மையாகவே கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தால் அவர் என்ன செய்வார்?
16. நாம் விசுவாசத்தினாலே நீதிமான்கள் ஆக்கப்படுகிறோமா?
17. எவ்வகையான விசுவாசம் பற்றி வேதாகமம் போதிக்கிறது?
18. எப்படி நாம் நம்முடைய விசுவாசத்தை நிரூபிக்க முடியும்?
19. விசுவாசம் எப்படி உண்டாகிறது என்பதை கூறுக?
20. இது ஒரு தனிப்பட்ட நபரைச் செயல்படத் தூண்டுகிறதா?
21. விசுவாசம் கர்த்தருடைய கட்டளைகளை கேள்வி கேட்குமா?
22. மாற்கு 16:16 யை மேற்கோள் காட்டி அதை விளக்குக!
23. எல்லா மனமாற்ற சம்பவங்களிலும் எது சுட்டிக் காட்டப் பட்டிருக்கிறது?
24. ஜனங்கள் விசுவாசித்த பிறகு என்ன செய்தார்கள்?
25. எத்தனை விசுவாசங்கள் உள்ளன?
26. நம் விசுவாசம் நம்மை என்ன செய்யத் தூண்டும்?

பாடம்-7

# பாவங்களிலிருந்து மனந்திரும்புதல்
# Repentance From Sins

**சு**விசேஷத்தின் ஒரு கட்டளை மனந்திரும்புதலாகும். ஆனால், மனம் திரும்புதல் என்றால் என்ன? அது கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலோடு என்ன பொருள்படுகிறது? மனம் திரும்புதல் என்னும் வார்த்தையின் பொருள் மறுபடியும் திரும்புவது, வேறொரு திசையில் செல்வது, மாறுவது, மோசமான மற்றும் தவறான காரியங்களைச் செய்வதில் இருந்து விடுபடுவது போன்ற பொருள்களைக் கொடுக்கிறது. இயேசு கிறிஸ்து ஒரு சந்தர்ப்பத்தில் நாம் எதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோமோ அதை விளக்குவதற்காக உவமை ஒன்றைச் சொன்னார். 'ஆயினும் உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள், மூத்தவனிடத்தில் அவன் வந்து: மகனே நீ போய் இன்றைக்கு என் திராட்சத்தோட்டத்தில் வேலைசெய் என்றான். அதற்கு அவன்: மாட்டேன் என்றான். ஆகிலும், பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான். இளையவனிடத்திலும் அவன் வந்து, அப்படியே சொன்னான், அதற்கு அவன்: போகிறேன் ஐயா என்று சொல்லியும் போகவில்லை. இவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன் என்று கேட்டார். அதற்கு அவர்கள்: மூத்தவன்தான் என்றார்கள். அப்பொழுது, இயேசு அவர்களை நோக்கி: ஆயக்காரரும், வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனென்றால், யோவான் நீதிமார்க்கமாய் உங்களிடத்தில் வந்திருந்தும் நீங்கள் அவனை விசுவாசிக்கவில்லை. ஆயக்காரரும், வேசிகளுமோ அவனை விசுவாசித்தார்கள். அதை நீங்கள் கண்டும், அவனை விசுவாசிக்கும்படியாகப் பின்பாகிலும் மனஸ்தாபப்பட வில்லை என்றார். (மத்தேயு 21:28-32).

கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலோடு சம்பந்தப்படும்போதும், ஒருவர் பாவத்திலிருந்து மனம் திரும்பும் போதும் அது கர்த்தருடைய மரணத்துக்கு அடையாளமாக இருக்கிறது. மேற்சொல்லப்பட்ட இரண்டு சம்பவங்களிலும் மனந்திரும்புதல் ஏன் முக்கியமானது என்பதை நாம் காண முடியும் .

மனிதன் பாவி என்பதையும் ரோமர் 3:23,பாவத்தின் சம்பளம் மரணம் என்பதையும் இயேசு கிறிஸ்து அறிந்திருக்கிறபடியால், ஒருவர் மனந்திரும்பாவிட்டால் அப்படியே கெட்டுப் போவான் என்று இயேசு போதித்தார் (லூக்கா 13:3).

மனம்திரும்புதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காக கிறிஸ்து அதே வாக்கியத்தை மறுபடியும் சொன்னார் [லூக்கா 13:5] . வேறு விதமாகச் சொன்னால், ஒருவர் தன்னை அழிக்கும் ஒன்றி லிருந்து மனம் திரும்பாவிட்டால் அந்த நபர் இழந்து போவான் என்று இயேசு சொன்னார். மறுபடியும் கிறிஸ்து இவ்விதமாகச் சொன்னார். அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லு கிறேன்'[லூக்கா 15:7]. இங்கே மனம் திரும்புதல் என்பது ஒருவர் தான் செய்த பாவங்களுக்காக வருத்தப்படுவதை விட மேலானது என்பது சரியாக புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஒருவர் தான் செய்த குற்றத் திற்காகப் பிடிபட்டு சிறையில் அடைக்கப்பட்டதற்காக வருத்தப் படலாம். அந்த நபர் தான் செய்த குற்றத்திற்காக மனஸ்தாபப்படாமல் தான் அனுபவிக்கும் தண்டனைக்காக மனஸ்தாபப்படலாம். இது உண்மையான மனம்திரும்புதல் அல்ல. இதைக் குறித்து அப்போஸ் தலனாகிய பவுல் இவ்விதமாகச் சொல்கிறார். தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது. லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது [2 கொரிந்தியர் 7:10].

யார் மனந்திரும்ப வேண்டும்? பவுல் மார்ஸ் மேடையில் பிரசங்கி த்தபோது பிரசங்கத்தின் இறுதிப்பகுதியில் அவர் இவ்விதமாகச் சொன்னார். *அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார். இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்'* [அப்போஸ்தலர் 17:30]. எனவே, இந்த வசனத்தின்படி எல்லோரும் மனந்திரும்ப வேண்டும். அதாவது, தங்கள் பாவங்களிலிருந்து திரும்ப வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். மேலும், நம்முடைய அறியாமையின் காரணமாக ஒரு காலகட்டத்தில் தேவன் சில காரியங்களைக் கண்டுகொள்ளாமல் இருந்திருக்கலாம். ஆனால், இப்போது பாவம் அறியாமல் செய்யப் பட்டதா அல்லது அறிந்தே செய்யப்பட்டதா என்பது பற்றி எல்லாம் கவலைப்பட மாட்டார் அல்லது பொருட்படுத்தமாட்டார் என்பதை இங்கே பவுல் தெளிவுபடுத்துகிறார். மறுபடியும் பேதுரு இதையே சொல்லுகிறார் [ 2 பேதுரு 3:9].

நாம் மனதிரும்புதல் பற்றிப் பேசும்போது, இயற்கையாகவே வேத வாக்கியங்கள் முதிர்ச்சி அடைந்த நபர்கள் தான் மனந்திரும்ப வேண்டும் என்று சொல்கின்றன. சிறுபிள்ளைகள் மனந்திரும்ப

வேண்டிய அவசியம் இல்லை என்று வேதாகமம் தெளிவுபடுத்துகிறது. நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால், இந்தப் பிள்ளையைப்போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோகராஜ்யத்தில் பெரியவனா யிருப்பான்' [மத்தேயு 18:3,4]. சுவிசேஷம் தாங்கள் செய்த பாவங்களைக் குறித்த அறிவுடையவர்கள், தேவனுக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்கள் தான் மனந்திரும்ப வேண்டும் என்று போதிக்கிறது. அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்துக்கு நாம் திரும்பும் போது அங்கே பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் அந்தப் பெந்தேகொஸ்தே நாளிலே ஜனங்களுக்கு பிரசங்கித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பாவிகளுக்குப் பிரசங்கித்தார்கள். அதிலும் குறிப்பாக, இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட போது அதில் பங்கெடுத்த பலரும் அந்தக் கூட்டத்தில் இருந்தார்கள். பிரசங்கத்தைக் கேட்டவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டபோது அவர்கள் செய்ய வேண்டியதை பேதுரு இப்படியாகச் சொன்னார்.

*'பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'* [அப்போஸ்தலர் 2:38]. பேதுரு மற்றும் ஒரு பிரசங்கத்தில் இப்படிச் சொன்னார். ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும்.. [அப்போஸ்தலர் 3:19]. மேற்சொல்லப்பட்ட வசனங்களின்படி மனம் திரும்புதல் என்பது சுவிசேஷத்தின் கட்டளைகளில் ஒன்றாக இருக்கிறது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. எனவே, ஒருவர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றால் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும். வேறு விதமாகச் சொன்னால், ஒருவர் மனந்திரும்பாமல் இரட்சிக்கப்பட்டு பரலோகம் போகவே முடியாது . பரலோகம் போக ஒழுக்கமான வாழ்க்கை மாத்திரம் போதாது. ஒருவர் இரட்சிப்பை பெற்றுக் கொள்ள மனந்திரும்ப வேண்டும் என்று கர்த்தர் சொன்ன காரியத்திற்கு ஈடாக நாம் எதையும் வைக்கவே முடியாது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திற்கு நாம் மறுபடியும் திரும்பும் போது, அதில் இடம் பெற்றிருக்கும் மனமாற்றச் சம்பவங் களை நாம் ஆராய்ந்து பார்க்கும் போது, மனம் திரும்புதல் நேரடியாக

கட்டளையிடப்படாவிட்டாலும் கூட மறைமுகமாக அங்கே சொல்லப் பட்டிருக்கிறதை நம் காண முடியும். அப்போஸ்தலர் பதினாறாம் அதிகாரத்தில் பவுலும், சீலாவும் கர்த்தருடைய வார்த்தையை சிறைச்சாலைக்காரனுக்கும், அவன் வீட்டாருக்கும் பிரசங்கித்த பிறகு, இந்த சிறைச்சாலைக்காரன் பவுல் மற்றும் சீலாவின் காயங்களைக் கழுவியிருக்கிறான். இது மனம் திரும்புதல் இல்லை என்றால் வேறு என்ன? சவுலின் காரியத்தைப் பொருத்தவரை, அப்போஸ்தலர் ஒன்பதாம் அதிகாரத்தின்படி அவன் கிறிஸ்தவர்களை கடுமையாக துன்பப்படுத்தியவன். ஆனால், கர்த்தர் அவனுக்கு தரிசனமான பிறகு அவன் ஒரு வித்தியாசமான மனிதனாக இருந்ததை நம்மால் காண முடியும். சவுல் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்தது மாத்திரம் அல்லாமல், அவர் கிறிஸ்தவனாக மாறின பிறகு கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் அறையப்பட்டதையும் குறித்துப் பிரசிங்கத்தார். ஆனால், அவர் சவுலாக இருந்தபோது இந்தக் காரியத்தைக் கடுமையாக எதிர்த்தார். இது மனந்திரும்புதல் இல்லையா ?

ஒருவர் தன் பழைய பாவங்களிலிருந்து மனம் திரும்பி, கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும்போது அவருடைய பழைய பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டு முற்றிலுமாக கழுவப்படுகின்றன. அது மாத்திரமில்லாமல், மனம் திரும்பின ஒரு பாவி கிறிஸ்துவுக்குள் ஒரு புது சிருஷ்டியாக இருக்கிறார் (2 கொரிந்தியர் 5:17), அதாவது, கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய மனிதனாக இருக்கிறார் (கலாத்தியர் 3:26,27). முன்பு செய்த காரியங்களைப் போல் இப்போது அவர் செய்ய மாட்டார். முன்பு எவைகளை எல்லாம் அவர் எதிர்த்தாரோ அவை களுக்காக இப்போது அவர் நிற்கிறார். இந்த அனுபவத்தைப் போல் உலகில் வேறு எந்த அனுபவமும் இல்லை.

ஒருவர் கிறிஸ்தவரான பின்பு கூட சில சமயங்களில் மறுபடியும் மனம் திரும்ப வேண்டியதாய் இருக்கும். கிறிஸ்தவர் என்று சொன்னால் அவர் பரிபூரணமானவர் அல்ல. சில வேளைகளில் உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் கூட தவறுகள் செய்யலாம். பாவம் செய் கிறவர்கள் தங்கள் குற்றங்களை அறிக்கையிட்டு, பாவ மன்னிப்புக் காகத் தேவனிடம் ஜெபிக்க வேண்டும். இல்லையென்றால், அவர் களும் இழந்து போவார்கள் (யாக்கோபு 5:16; அப்போஸ்தலர் 8:22 ).

ஆனால், இதுவரை கிறிஸ்தவர்களாக மாறாதவர்கள் அதாவது, கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்கள் ஆகாதவர்கள் முதலில் கிறிஸ்துவை கேள்விப்பட வேண்டும், அவரை விசுவாசிக்க வேண்டும், தங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்ப வேண்டும்

கிறிஸ்துவை தேவனுடைய குமாரனாக அறிக்கையிட வேண்டும், பின்பு பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற வேண்டும். இரட்சிக்கப்படுவதற்கான ஒவ்வொரு கட்டளையும் முக்கியமானது தான். ஒரு கட்டளை இல்லாமல் மற்றொரு கட்டளையைக் கொண்டு ஒருவரால் இரட்சிக்கப்பட முடியாது. மனம் திரும்புதலைப் பொறுத்த வரை ஒருவர் தன் வாழ்வில் இருக்கிற எல்லாவிதமான தவறு களையும், பக்தி சம்மந்தமான எல்லாத் தவறுகளையும் விட்டுவிட்டு தேவனுக்குப் பிரியமான வாழ்க்கையை வாழ வேண்டும். அப்போது தான் ஒருவர் தான் மனந்திரும்புதலுக்கான கட்டளைக்கு கீழ்ப் படிந்ததாகச் சொல்ல முடியும்.

## கேள்விகள்

1. மனந்திரும்புதல் என்பதை விளக்குக?
2. அது கிறிஸ்துவின் மரணம் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுத லோடு என்ன முக்கியத்துவத்தைப் பெறுகிறது?
3. மனிதன் எப்படிப் பிரிக்கப்படுகிறான்?
4. லூக்கா 13:3யை மேற்கோள் காட்டுக
5. ஒருவர் மனம் திரும்ப மறுத்தால் அவருக்கு என்ன நடக்கும்?
6. மனம் திரும்புதல் உண்டாகும் போது யார் மகிழ்ச்சி அடைகிறார்?
7. ஒருவர் தன் தவறுகளுக்காக வருத்தப்படுவதை மனந்திரும்புதல் என்று சொல்ல முடியுமா?
8. தேவனுக்கேற்ற துக்கம் என்ன செய்கிறது என்பதை விவரி
9. யார் மனம் திரும்ப வேண்டும்?
10. 2 பேதுரு 3:9 யை வாசித்து விளக்குக
11. குழந்தைகள் மனம் திரும்ப வேண்டுமா?
12. நற்செய்தி யாருக்கு பிரசிங்கிக்கப்பட வேண்டும்?
13. அப்போஸ்தலர் 2:38 மற்றும் 3:19 வசனங்களில் பிரசங்கிக்கப் படும் மனம் திரும்பதலை விவாதி
14. மனந்திரும்புதல் சுவிசேஷத்தின் கட்டளைகளில் ஒன்றாக பட்டியலிடப்பட்டிருக்கிறதா?

15. ஒருவர் இவ்வுலகில் நல்லொழுக்கம் உள்ள வாழ்க்கை வாழ்வதினால் மாத்திரம் பரலோகம் போக முடியுமா?

16. அப்போஸ்தலருடைய நடபடிகள் பதினாறாம் அதிகாரத்திலும், ஒன்பதாம் அதிகாரத்திலும் மனம்திரும்புதல் எப்படி போதிக்கப் பட்டிருக்கிறது என்பதைக் காட்டுக?

17. எப்படி மனந்திரும்புதல் மாற்றத்தைக் கொண்டு வருகிறது?

18. ஒருவர் கிறிஸ்தவரான பிறகு மனம் திரும்ப வேண்டிய அவசியம் இருக்குமா?

19. ஒருவர் தன் பாவங்களில் இருந்து மனந்திரும்பாமல் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய முடியுமா?

பாடம்-8

# கிறிஸ்துவை அறிக்கைபண்ணுதல்

# Confession of Christ

நற்செய்தியின் மற்றுமொரு கட்டளை கிறிஸ்துவை தேவனுடைய குமாரனாக அறிக்கை பண்ணுவதாகும். அறிக்கை பண்ணுவது என்பதன் பொருள். அறிவிப்பது, ஒப்புக் கொள்வது, பிறர் மீது நமக்குள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துவது போன்றவை. கர்த்தர் தமக்குக் கீழ்ப்படிகிற எல்லோரிடமிருந்தும் இதைத்தான் எதிர் பார்க்கிறார். ஒருவர் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிப்பதை மற்றவர்களுக்கு முன்பாக அறிக்கை பண்ண வேண்டும். ஒருவர் அப்படி அறிக்கை செய்ய மறுத்தால் அந்த நபர் கர்த்தருக்குக் கீழ்ப்படிய ஆயத்தமாக இல்லை என்று பொருள்.

கிறிஸ்து அறிக்கை பண்ணுவதின் முக்கியத்துவத்தை போதித் திருக்கிறார். மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன். (மத்தேயு 10:32 ,33).

நாம் கீழ்க்காணும் காரியங்களையும் கவனிப்போம்

1. கிறிஸ்துவை அறிக்கை பண்ண எல்லோரும் அழைக்கப் படுகிறார்கள். அவர்கள் யார் என்பதோ அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதோ ஒரு பொருட்டே அல்ல.

2. இங்கே அறிக்கை பண்ணுதல் என்பது ஒருவர் தன்னுடைய பாவங்களை அறிக்கை பண்ணுவதைக் குறிக்காது. மாறாக, கிறிஸ்துவை அறிக்கை பண்ணுவதைத் தான் குறிக்கிறது.

3. இந்த அறிக்கை மனுஷருக்கு முன்பாகப் பண்ணப்பட வேண்டும். அதற்கு சாட்சிகளும் இருக்க வேண்டும். ஒருவர் கிறிஸ்துவை விசுவாசித்தால் அந்த விசுவாசத்தை அவர் எல்லோரும் அறியும்படி செய்ய வேண்டும்.

4. மனுஷருக்கு முன்பாகத் தம்மை அறிக்கை பண்ணுகிற அவர்களை தாம் பரலோகத்தில் இருக்கிற பிதாவுக்கு முன்பாக அறிக்கை பண்ணுவதாக நம் ஆண்டவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.

5. அதுபோல் மனுஷனுக்கு முன்பாகக் கிறிஸ்துவை மறுதலிப்பவர் களை கிறிஸ்துவும் பரலோகத்தில் இருக்கிற பிதாவுக்கு முன்பாக மறுதலிப்பார். இதில் ஒருவர் யார், அவர் எங்கே இருந்து வருகிறார் என்பதெல்லாம் ஒரு பொருட்டே அல்ல.

கிறிஸ்துவை அறிக்கை பண்ணாதவர்கள் பற்றி வேத வசனங்கள் என்ன சொல்கின்றன?

1. மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கை பண்ணாத அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள்.
2. இப்படிப்பட்டவனே வஞ்சகனும், அந்திக்கிறிஸ்துவு மாயிருக்கிறான். [2 யோவான் 1:7];
3. இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், [பிலிப்பியர் 2:10 ]
4. பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்த ரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். [பிலிப்பியர் 2:11,12].

அடுத்ததாக, ஒருவர் கர்த்தராகிய இயேசுவைத் தன் வாயினாலே அறிக்கை இடும்போது அங்கே இரட்சிப்பு உண்டாகிறது என்று பார்க்கிறோம். தயவுசெய்து இந்த வாக்கியங்களைக் கவனியுங்கள். என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினா ரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். [ரோமர் 10:9,10].

சிலர் ஒருவர் இரட்சிக்கப்படுவதற்கு அவர் செய்ய வேண்டியது எல்லாம் தன்னுடைய பாவங்களை அறிக்கை செய்து விட்டு ஆண்ட வராகிய இயேசு கிறிஸ்துவைச் சொந்த ரட்சகராக ஏற்றுக் கொண்டால் போதுமானது என்று தவறாக போதித்திருக்கிறார்கள். அப்படி யென்றால், விசுவாசம் அவசியமே இல்லையா? அதற்கு ஒருவர் அறிக்கையிடுவது என்பது விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டது தானே என்று பதிலளிப்பார். அடுத்த வசனமே, விசுவாசம் அறிக்கை பண்ணுவதிலும் எப்படி இரட்சிப்பின் திட்டத்தோடும் பொருந்துகிறது என்பதைக் காட்டுகிறது. அதாவது, நீதி உண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும். இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும் என்று. வேத வசனம் தெளிவாகச்

சொல்லுகிறது. இங்கே அறிக்கை பண்ணுவது என்பது ஒருவர் தன்னுடைய பாவங்களை அறிக்கை பண்ணுவதைக் குறிக்காமல், இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை பண்ணுவதை தான் குறிக்கிறது.

கடைசியாக, ஒருவர் ஞானஸ்நானத்துக்கு முன்பாக அறிக்கை பண்ண வேண்டும் என்பதற்கு உதாரணமாக வேதத்திலே நாம் ஒரு நபரைப் பற்றி பார்க்கப் போகிறோம். கீழ்க்காணும் வேத வாக்கியங்களை கவனியுங்கள்

‘பின்பு கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி; நீ எழுந்து, தெற்கு முகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்தர மார்க்கமாய்ப் போ என்றான். அந்தப்படி அவன் எழுந்துபோனான். அப்பொழுது எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும், அவளுடைய பொக்கிஷமெல்லா வற்றிற்கும் தலைவனுமாயிருந்த எத்தியோப்பியனாகிய ஒருவன் பணிந்து கொள்ளும்படி எருசலேக்கு வந்திருந்து, ஊருக்குத் திரும்பிப் போகும்போது, தன் இரதத்திலே உட்கார்ந்து, ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக் கொண்டிருந்தான். ஆவியானவர்; நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று பிலிப்புடனே சொன்னார். அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய்ச் சேர்ந்து, அவன் ஏசாயா தீர்க்க தரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதைக் கேட்டு; நீர் வாசிக்கிறவை களின் கருத்து உமக்குத் தெரியுமா என்றான். அதற்கு அவன்; ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும் என்று சொல்லி, பிலிப்பு ஏறி, தன்னோடே உட்காரும்படி அவனை வேண்டிக்கொண்டான். அவன் வாசித்த வேதவாக்கியம் என்னவென்றால்; அவர் ஆட்டைப் போல அடிக்கப்படுவதற்குக் கொண்டு போகப்பட்டார். மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக் குட்டியைப்போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார். அவர் தம்மைத் தாழ்த்தினபோது அவருடைய நியாயம் எடுத்துப் போடப்பட்டது. அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப் போயிற்று. அவருடைய வம்சத்தை யாரால் சொல்லி முடியும் என்பதே. மந்திரி பிலிப்பை நோக்கி; தீர்க்கதரிசி யாரைக்குறித்து இதைச் சொல்லுகிறார்? தம்மைக்குறித்தோ, வேறொருவரைக் குறித்தோ? எனக்குச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அப்பொழுது பிலிப்பு பேசத்தொடங்கி, இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான். இவ்விதமாய் அவர்கள் வழிநடந்துபோகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி; இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான்.

அதற்குப் பிலிப்பு; நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன்; இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, இரதத்தை நிறுத்தச்சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய் விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான். [அப்போஸ்தலர் 8:26-39].

இங்கே என்ன நடந்தது என்பது நமக்கு இப்போது தெளிவாகிறது. பிலிப்பு இந்த எத்தியோப்பிய மந்திரிக்கு கிறிஸ்துவைப் பற்றியும் அவருக்குக் கீழ்ப்படிய என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் போதித்திருக்கிறார். இந்த மந்திரி கர்த்தரை குறித்துத் கற்றுக்கொண்ட பிறகு அவருடைய சித்தத்திற்குத் தன்னை ஒப்புக்கொடுக்க விரும்பினார். ஆனால், பிலிப்பு அந்த மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுப்பதற்கு முன்பாக அவர் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனாக விசுவாசிக்கிறாரா என்பதை அறிய விரும்பினார். மந்திரி விசுவாசித்த பிறகுதான் பிலிப்பு மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுக்க முன் வந்தார்.

இந்த உதாரணத்தை அடிப்படையாகக் கொண்டும், கிறிஸ்துவை அறிக்கை பண்ணுவதை விவரிக்கும் மற்ற வசனங்களுக்கு இசைவாகவும், நாம் ஒருவரை ஞானஸ்நானப்படுத்துவதற்கு முன்பாக அந்த நபர் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனாக விசுவாசிக் கிறாரா என்று கேட்கிறோம். அந்த நபர் ஆம் என்று சொல்லும்போது நாம் ஞானஸ்நானம் கொடுக்க ஆயத்தமாக வேண்டும். இந்த அறிக்கை நல்ல அறிக்கையாக வேத வாக்கியங்களில் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

மேற்சொல்லப்பட்ட காரியங்களை வைத்துப் பார்க்கும் போது இங்கே நமக்கு என்ன புரிகிறது? ஒருவர் இரட்சிக்கப்பட அவர் சுவிசேஷத்தைக் கேள்விப்பட வேண்டும். அதை விசுவாசிக்க வேண்டும், தன் பாவங்களில் இருந்து மனம் திரும்ப வேண்டும், கிறிஸ்துவை தேவனுடைய குமாரனாக அறிக்கையிட வேண்டும் கடைசியாக, பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற வேண்டும். இங்கே கிறிஸ்துவை அறிக்கை பண்ணுவது என்பது தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதி அல்லது சுவிசேஷக் கட்டளைகளில் ஒன்றாக இருக்கிறது. இது மாத்திரமே ஒருவரை இரட்சிக்காது. ஆனால், இது இல்லாமல் ஒருவரும் இரட்சிக்கப்பட முடியாது. கர்த்தர் இதை எந்த இடத்தில் வைத்திருக்கிறாரோ அந்த இடத்தில் இது இருக்கும்போது முக்கியமானதாகவும், வல்லமை உள்ளதாகவும் இருக்கிறது.

# கேள்விகள்

1. அறிக்கை பண்ணுதல் என்னும் வார்த்தையின் பொருளை விளக்குக
2. ஒருவர் தேவனுடைய பிள்ளையாக மாற எதை அறிக்கை பண்ண வேண்டும்?
3. மத்தேயு 10:32, 33 வசனங்களை வாசித்து விவாதி
4. யார் இயேசுவை அறிக்கை பண்ண அழைக்கப்படுகிறார்?
5. அறிக்கை எங்கே பண்ண வேண்டும்?
6. அதன் விளைவாக கர்த்தர் என்ன செய்வார்?
7. இயேசுவை அறிக்கையிட மறுப்பவர்களுக்கு என்ன நடக்கும்?
8. எப்படி அறிக்கை பண்ணப் பட வேண்டும்?
9. எது உண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்?
10. பிலிப்பு எத்தியோப்பிய மந்திரியை ஞானஸ்நானப்படுத்துவதற்கு முன்பாக மந்திரி என்ன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்?
11. மந்திரி எப்போது அறிக்கை பண்ணினார்? எதை அறிக்கை எண்ணினார்?
12. ஏன் இந்த அறிக்கை அவசியமாய் இருந்தது?
13. இன்று ஞானஸ்நானம் பெற விரும்பும் ஒருவர் மனமாற்றச் சம்பவங்களில் ஒருவர் அறிக்கை பண்ணினது போல செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்க நமக்கு உரிமை உண்டா?
14. எவ்விதமான அறிக்கை பெரும்பாலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது?
15. இரட்சிப்பின் திட்டத்தை எழுதுக?

# பாவ மன்னிப்புக்கான ஞானஸ்நானம்

## Baptism for the remission of sins

வேதாகமத்தில் எப்போதுமே கடினமான பாடங்களில் ஒன்று ஞானஸ்நானம் பற்றிய பாடமாகத்தான் அநேகமாக இருக்கும். இருந்த போதிலும், அது வேதாகம பாடமாக இருக்கிறது. அது மாத்திர மல்லாமல், சுவிசேஷக் கட்டளைகளில் ஒன்றாகவும் இருக்கிறது. இது மற்ற கட்டளைகளை விட முக்கியமானது அல்ல, அதே நேரத்தில் மற்ற கட்டளைகளுக்கு கீழ்ப்படிவது எவ்வளவு அவசியமோ அதே போல் இந்த ஞானஸ்நான கட்டளைக்கு கீழ்படிவதும் அவசியமா யிருக்கிறது. இந்த ஒரு கட்டளையால் நிச்சயமாகவே இரட்சிப்பை கொண்டுவர முடியாது. ஆனால், கூட்டு கட்டளைகளுக்கு கீழ்ப் படியும் போது அது இரட்சிப்பைக் கொண்டு வருகிறது.

நாம் இந்தப் பாடத்தில் முடிந்தவரை ஞானஸ்நானம் பற்றி அதிகமான காரியங்களைக் கற்றுக் கொள்வோம். முதலாவதாக, ஞானஸ்நானம் என்பதற்கான பொருளைப் புரிந்து கொள்ள முயற்சிப் பதில் இருந்து நாம் தொடங்குவோம். ஞானஸ்நானம் என்னும் தமிழ் வார்த்தை, 'Baptizo' என்னும் வார்த்தையில் இருந்து மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. இதன் பொருள் தண்ணீருக்குள் மூழ்குவது, தண்ணீரால் அடக்கம் பண்ணப்படுவது போன்றவைகளாகும். இதை வேத வாக்கி யங்கள் ஆதரிக்கின்றன. கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?

*மேலும், பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரி லிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாம் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ் நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். (ரோமர் 6:3,4).*

ஞானஸ்நானத்தில் அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர் களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவ னுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்' [கொலோசெயர் 2:12]. அப்படி யென்றால் தெளித்தல், ஊற்றுதல் போன்றவைகள் எல்லாம் எப்படி? அவைகள் எல்லாம் மனிதனால் உண்டாக்கப்பட்டவைகள் என்று நிராகரிக்கப்பட வேண்டும். மேலும், அவைகள் எல்லாம் மூழ்குதலுக்கு மாற்றாக அறிமுகப்படுத்தப்பட்டவைகள் தான். தேவனுடைய மனிதர்கள் இவைகளை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியர் 4:5 ல் ஒரே ஒரு ஞானஸ்நானம் தான் உண்டு என்று தெளிவுபடுத்தியிருந்தாலும் கூட பல்வேறுபட்ட ஞானஸ்நானங்கள் பற்றி வாசிக்கிறோம். இப்போது நம்மை எது கட்டுப்படுத்துகிறது? நாம் அப்போஸ்தலர் 8:26–39 வசனங்களுக்குத் திரும்பும்போது பிலிப்பு மற்றும் எத்தியோப்பிய மந்திரி பற்றி வாசிக்கிறோம். இவருக்கு பிலிப்பு கிறிஸ்துவைப் பற்றியும் அவருடைய சித்தம் பற்றியும் போதித்த பிறகு இவர் ஞானஸ்நானம் பெற விரும்பினார். இதைப் பற்றி வேதவாக்கியம் இவ்விதமாக சொல்கிறது. இவ்விதமாய் அவர்கள் வழிநடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி; இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான்.

அதற்குப் பிலிப்பு; நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன்; இயேசுகிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான்' (அப்போஸ்தலர் 8:36–39).

இப்போது நாம் இதிலிருந்து சில காரியங்களை கவனிப்போம் :

1. இந்த மந்திரி கர்த்தருக்கு கீழ்ப்படிந்ததின் உச்சகட்டமாகத்தான் ஞானஸ்நானம் இருந்திருக்கிறது
2. ஞானஸ்நானம் அடக்கம் பண்ணப்படுவதாக, அதாவது தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப்படுவதாக தான் இருந்திருக்கிறது
3. இந்த எளிமையான உண்மையைப் புரிந்து கொள்வதற்கு எவ்விதமான வாக்குவாதமும் அவசியமே இல்லை. வேதவாக்கியம் இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள் என்று தெளிவாகச் சொல்லுகிறது. இங்கே இருவரும் என்பது பிலிப்பையும், எத்தியோப்பிய மந்திரியையும் தான் குறிக்கிறது. மேலும், வேதவாக்கியம் அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினார்கள் என்று ஆணித்தரமாகச் சொல்கிறது. இந்த உண்மைக்கு எதிராக ஒருவரால் எப்படி வாக்குவாதம் செய்ய முடியும்?

அடுத்ததாக, நாம் (யோவான்3:3–5), வசனங்களுக்கு திரும்பி அவைகளிலிருந்து காரியங்களைக் கற்றுக் கொள்வோம். இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே

மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அதற்கு நிக்கொதேமு ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இராண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான். யோவான் 3:4 இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறாவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் ‘[யோவான் 3:3–5] என்றார்.

ஒருவருடைய இரட்சிப்பில் தண்ணீர் என்ன பங்கு வகிக்கிறது? இது மிக சுலபமானது. இங்கே நாம் கருத்தில் கொள்ள வேண்டிய காரியம் தண்ணீர் ஞானஸ்நானம் சம்மந்தமானது என்பதாய் இருக்கிறது. ஒருவர் ஞானஸ்நானத்தின் மூலமாகவே மறுபடியும் பிறக்கிறார். இது 1கொரிந்தியர் 12:13, ரோமர் 6:3,4 போன்ற வசனங்களுக்கு இசைவாக இருக்கிறது. இவ்வசனங்கள் ஒருவர் ஞானஸ்நானம் பெரும் செயல் அவரை கர்த்தருடைய ராஜ்ஜியம் அல்லது சபைக்குள் வைக்கிறது என்று சொல்கின்றன.

மறுபடியுமாக, பவுல் தீத்துவுக்கு எழுதும் போது, இவ்விதமாக சொல்கிறார். *‘நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார் (தீத்து 3:5).* இங்கே மறுஜென்ம முழுக்கென்பது தண்ணீர் ஞானஸ்நானத்துக்கு ஒப்பனையாக சொல்லப்பட்டு இருக்கிறது. அது பற்றித்தான் பவுல் இங்கே பேசிக் கொண்டிருக்கிறார். எனவே, ஞானஸ்நானம் என்பது அடக்கம் பண்ணப்படுவது. அதாவது, தண்ணீரில் அடக்கம் பண்ணப்படுவதைக் குறிக்கிறது.

பல்வேறுப்பட்ட வசனங்கள் ஞானஸ்நானம் என்ன செய்கிறது என்பது பற்றி சொல்வதை நாம் வாசிக்கும் போது அதன் முக்கியத்துவத்தை நாம் காணமுடியும். உதாரணமாக, அது இரட்சிக்கிறது *‘இதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது. (1 பேதுரு 3:21).*

இங்கே அப்போஸ்தலன் ஞானஸ்நானம் இரட்சிக்கிறது என்று மாத்திரம் சொல்லவில்லை. ஒருவர் கர்த்தருடைய வார்த்தைக்கு ஏற்றவாறு நடந்து கொள்ளும் போதுதான் அது இரட்சிக்கிறது என்பதையும் வலியுறுத்துகிறார். மறுபடியும் கிறிஸ்துதாமே இவ்விதமாக சொல்கிறார். *விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்*

*குள்ளாகத் தீர்க்கப்படுவான்.* [மாற்கு 16:16]. ஒருவரை ஞானஸ் நானம் எப்போது இரட்சிக்கிறது? அதாவது, ஒருவர் விசுவாசித்து ஞானஸ்நானம் பெறும் போது இரட்சிக்கிறது. எனவே, ஒருவர் ஞானஸ்நானத்தை நிராகரித்தால் அவர் கிறிஸ்துவை நிராகரிக்கிறார் என்று தான் பொருள்படும்.

நாம் தொடர்ந்து பார்க்கும் போது ஞானஸ்நானம் பாவமன்னிப்புக் கானது என்று நாம் பார்க்கிறோம். *'பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் (அப்போஸ்தலர் 2:38).* சவுல் தன்னுடைய பாவங்கள் கழுவப்படும்படி ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று அவருக்கு சொல்லப்பட்டது. *இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம்பெற்று, உன் பாவங்கள் போகக்கழுவப்படு என்றான்* [அப்போஸ்தலர் 22:16]. ஞானஸ்நானம் கர்த்தருடைய கட்டளை என்று நாம் பார்க்கிறோம். கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சிலநாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக் கொண்டார்கள் [அப்போஸ்தலர் 10:48].

இரட்சிப்பு மற்றும் பாவமன்னிப்பு போன்றவைகளைத் தாண்டி இந்த ஞானஸ்நானத்தின் மூலமாகத்தான் ஒருவர் கிறிஸ்துவின் இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்துகிறார் . மத்தேயு 26:28 ல் பாவ மன்னிப்புக்காக கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்படுகிறது என்று வாசிக்கிறோம். பெந்தேகொஸ்தே நாளிலே பேதுரு அங்கு கூடியிருந்த ஜனங்களைப் பார்த்து அவர்கள் பாவமன்னிப்பை பெற்றுக் கொள்ள வேண்டுமானால் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று சொன்னார். மறுபடியுமாக, எபேசியர்1:7 மற்றும் கொலோசெயர் 1:4 வசனங்களில் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாகத்தான் ஒருவர் பாவ மன்னிப்பை பெற்றுக் கொள்கிறார் என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, ஞானஸ்நான செயல் மூலமாகத் தான் ஒருவர் கிறிஸ்துவின் இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறார். அந்த இரத்தம் தான் அந்த நபருடைய பாவங்களைக் கழுவி சுத்திகரிக்கிறது என்பது நமக்கு தெளிவாகிறது. ரோமர் ஆறாம் அதிகாரத்தில் நாம் கிறிஸ்துவின் மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம் என்று நமக்கு சொல்லப் பட்டிருக்கிற கர்த்தருடைய கட்டளைக்கு, கீழ்ப்படிவதன் மூலமாக கர்த்தருடைய மரணத்தின் நன்மைகளை நாம் பெற்றுக் கொள்கிறோம் அதாவது, பாவ மன்னிப்பை நாம் பெற்றுக் கொள்கிறோம் என்பதாய் இருக்கிறது.

நம் தொடர்ந்து படிக்கும்போது ஞானஸ்நானத்தின் மூலமாகத்தான் நாம் கிறிஸ்துவுக்குள் வருகிறோம் என்று கற்றுக் கொள்கிறோம். பவுல் கலாத்திய சகோதரர்களுக்கு இவ்விதமாக எழுதுகிறார். *நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே.* [கலாத்தியர் 3:26,27].

ஒருவர் ஞானஸ்நானம் பெறாமல் இரட்சிக்கப்பட முடியாது என்பதைத்தான் மேற்சொல்லப்பட்ட காரியங்களில் இருந்து நாம் கற்றுக் கொண்டோம். வேதாகமத்தில் ஒரு தனி நபர் முதலாவது இரட்சிக்கப்பட்டு பின்பு ஞானஸ்நானம் பெற்றதாக எங்கேயும் நாம் பார்க்க முடியாது. ஒருவர் ஞானஸ்நானம் என்றால் என்ன என்பதையும் அதன் நோக்கத்தையும் புரிந்து கொள்ளவேண்டும். ஒருவர் பலமுறை முழுக்கு ஞானஸ்நானம் பெற்றிருக்கலாம். ஆனால் ,சரியான நோக்கத்திற்காக அவர் ஞானஸ்நானம் பெறவில்லை என்றால் அந்த நபர் வேத வாக்கியங்களின் அடிப்படையில் ஞானஸ்நானம் பெறவில்லை என்று தான் பொருள். ஒரே ஒரு ஞானஸ்நானம்தான் உண்டு. அந்த ஞானஸ்நானம் வேதாகமத்தின் ஒரே ஞானஸ்நானமாக இருக்க வேண்டும். என்றால் அது பாவ மன்னிப்புக்கான ஞானஸ்நானமாக, ஒருவரை சபையில் சேர்க்கிற ஞானஸ்நானமாக இருக்க வேண்டும் என்றால், அது முழுக்கு ஞானஸ்நானமாகத் தான் இருக்க வேண்டும். இல்லையென்றால் அது கேலிக் கூத்தாகிவிடும்.

ஆனால், ஒருவரை ஞானஸ்நானம் எப்போது இரட்சிக்கிறது? ஒருவர் கிறிஸ்துவின் தூய சுவிசேஷத்தைக் கேட்டு அதை விசுவாசித்து பாவங்களில் இருந்து உண்மையாகவே மனம் திரும்பி கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்து வேத வாக்கியங்களின்படி ஞானஸ்நானம் பெறும் போது மாத்திரமே அவர் இட்சிக்கப்படுகிறார். அதாவது, அப்போதுதான் ஞானஸ்நானம் ஒருவரை இரட்சிக்கிறது. மேலும், ஒருவரை கிறிஸ்துவுக்கு வெளியே இருந்து கிறிஸ்துவுக்குள்ளே அழைத்து வரும் கீழ்ப்படிதலின் கடைசி செயலும் இதுதான்.

கடைசியாக, ஒருவர் இந்த ஞானஸ்நான செயல் மூலமாகத்தான் புதிதான ஜீவன் உள்ளவராய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்கு உள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்து உடனே கூட அடக்கம் பண்ணப்படுகிறார். கர்த்தருடைய வழியில் நாம் மேம்பட இதைவிட சிறந்த வழி இல்லை.' கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்

குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும், *பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப் பட்டது போல, நாம் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம் (ரோமர் 6:3-6).*

## கேள்விகள்

1. வேதாகமத்தில் கடினமான பாடங்களில் ஒன்று எது? ஏன் அப்படி?
2. ஞானஸ்நானம் சுவிசேஷத்தின் ஒரு கட்டளையா?
3. ஞானஸ்நானம் மற்ற சுவிசேஷ கட்டளைகளை விட முக்கியமானதா?
4. ஒரு கட்டளை மாத்திரம் ஒருவரை இரட்சிக்குமா?
5. Baptizo என்னும் வார்த்தையை விளக்குக?
6. ரோமர் 6:3,4 மற்றும் கொலோசெயர் 2:12 எதை போதிக்கிறது?
7. தெளித்தல், ஊற்றுதல் என்றால் என்ன?
8. எத்தனை ஞானஸ்நானங்கள் உள்ளன?
9. வேதாகமத்தின் ஒரே ஞானஸ்நானம் என்பது என்ன?
10. அப்போஸ்தலருடைய நடபடிகள் 8:26–39 வசனங்களை வாசித்து அதை விவாதி.
11. எத்தியோப்பிய மந்திரி எதில் அடக்கம் பண்ணப்பட்டான்?
12. யோவான் 3:3–5 வசனங்கள் எப்படி அடக்கம் பண்ணுதலை போதிக்கின்றன?
13. மறுஜென்ம முழுக்கு என்றால் என்ன?
14. ஞானஸ்நானம் என்ன செய்கிறது என்பதை விளக்குக?

15. ஞானஸ்நானம் இரட்சிக்கிறதா?ஞானஸ்நானம் மாத்திரம் தான் இரட்சிக்கிறதா?

16. மாற்கு 16:16 யை மேற்கோள் காட்டுக

17. ஒருவர் பாவ மன்னிப்பை பெற்றுக் கொள்ள என்ன செய்ய வேண்டும்?

18. ஞானஸ்நானம் கட்டளை இடப்பட்டிருக்கிறதா?

19. எப்படி ஒருவர் கிறிஸ்துவின் இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறார்?

20. மத்தேயு 26:28 மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:38 யை வாசித்து விவாதி

21. எபேசியர் 1:7 மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் 22:16 வசனங்களை விவாதி

22. கிறிஸ்துவின் மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வது என்பதன் பொருள் என்ன?

23. ஒருவர் கிறிஸ்துவுக்குள்ளாக எப்படி வருகிறார்?

24. ஒருவர் தவறான நோக்கத்திற்காக ஞானஸ்நானம் பெறுவது சாத்தியமா? அப்படியானால் அவர் என்ன செய்ய வேண்டும்?

25. எப்போது ஒருவரை ஞானஸ்நானம் இரட்சிக்கிறது?

26. எப்படி ஞானஸ்நான செயலில் கர்த்தருடைய அடக்கம் மற்றும் அவருடைய உயிர்த்தெழுதலும் படம் பிடித்துக்காட்டப்படுகிறது?

பாடம்–10

# நற்செய்தியின் ஆசீர்வாதங்கள்

# Blessings of the Gospel

**ந**ற்செய்தியின் உண்மைகள் மற்றும் நற்செய்தியின் கட்டளை களைத் தாண்டி சுவிசேஷத்தில் ஆசீர்வாதங்களும் இருக்கின்றன. நிச்சயமாகவே, உண்மைகள் விசுவாசிக்கப்பட வேண்டும் கட்டளை கள் கீழ்ப்படிய வேண்டும். ஆசீர்வாதங்கள் சுவிசேஷத்தை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படிகிறவர்களால் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். அதனால் தான் *போஸ்டல் என்பவர்* இவ்விதமாகச் சொல்கிறார். *அவர் பாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர் களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்.* [எபே 1:3]. மேலும், பவுல் ரோமாபுரியில் இருந்த சகோதரர்களுக்கு இவ்விதமாக எழுதுகிறார். *'நான் உங்களிடத்தில் வரும்போது கிறிஸ்து வினுடைய சுவிசேஷத்தின் சம்பூரணமான ஆசீர்வாதத்தோடே வருவேனென்று அறிந்திருக்கிறேன். (ரோமர் 15:29).*

அந்த ஆசீர்வாதங்கள் என்னென்ன? அநேக ஆசீர்வாதங்கள் உண்டு. ஆனால், முக்கியமான சிலவற்றை மாத்திரம் கீழே நான் பட்டியலிடுகிறேன்:

1. ஒருவர் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியும் போது அவர் பாவமன்னிப்பை பெற்றுக் கொள்கிறார். *'பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் (அப்போஸ்தலர் 2:38).* இது ஒருவர் இரட்சிக்கப்பட்டு விட்டார் [மாற்கு 16:16], மறுபடியும் பிறந்து விட்டார் [யோவான் 3:5] என்று வேறு விதமாக சொல்வதாகும். ஒருவருடைய பாவங்கள் எல்லாம் கழுவப்பட்டு அந்த நபர் இப்பொழுது ஒரு புதிய மனிதனாக தன் வாழ்க்கையைத் தொடங்கவிருக்கிறார் என்று அறிந்து கொள்வது எவ்வளவு அருமையானது!
2. சுவிசேஷத்தின் மூலமாக ஒருவர் கிறிஸ்துவுக்குள் வருகிறார். *கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியா மலிருக்கிறீர்களா?* [ரோமர் 6:3].

நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. 'ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே' (கலாத்தியர் 3:26,27).

இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின' (2 கொரிந்தியர் 5:17). நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கிறபடியால் கர்த்தர் தம்முடையவர்களுக்காக வைத்திருக்கும் எல்லாவிதமான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் அனுபவிக்கும் உரிமை நமக்கு உண்டு.

3. நாம் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதன் மூலமாக கிறிஸ்துவின் சரீரம் அல்லது சபைக்குள் பிரவேசிக்கிறோம்.1 கொரிந்தியர் 12 ஆம் அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவின் சரீரம் பற்றி மிக விவரமாக விவாதிப்பார். அந்த சரீரம் சபை என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது (கொலோசெயர் 1:18; எபேசியர் 1:22,23). அதன் பின்பு பவுல் ஞானஸ்நான செயல் மூலமாகத்தான் நாம் சரீரம் அல்லது சபைக்குள் பிரவேசிக்கிறோம் என்பதை விளக்குகிறார் *'நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்* (1 கொரிந்தியர் 12:13). இவ்வுலகிலேயே மிகப்பெரிய அமைப்பு சபை தான். அதை யாராலும் அழிக்க முடியாது. ஆனால், அது என்றென்றும் நிலைத்து நிற்கும். இத்தகைய சரீரத்தில் அல்லது சபையில் அங்கம் வகிப்பது எவ்வளவு அற்புதமான ஒன்று!

4. நாம் இப்போது தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோம். ஆகையால், கிறிஸ்தவர்களாக இருக்கிறோம். '*ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்* (1 பேதுரு 4:16). ஏன் அப்படி? ஏனென்றால், கிறிஸ்துவின் நாமத்தில் தான் இரட்சிப்பு இருக்கிறது. *அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்* (அப்போஸ்தலர் 4:12). நாம் கிறிஸ்துவை விசுவாசித்து அவருடைய உபதேசங்களுக்கு கீழ்ப்படியும்போது, அவருடைய நாமத்தை நாம் தரித்துக்கொள்ள அனுமதிப்பதன் மூலமாக அவர் நம்மை கனப்படுத்துகிறார். இதுவே மிகப்பெரிய ஆசீர்வாதம் தான்.

*5. கிறிஸ்தவர்களாக நாம் கர்த்தரை ஆராதிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். 'உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும்,உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது: தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவி யோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் என்றார். (யோவான் 4:23,24).* நாம் சபை கூடி வருதலை விட்டுவிடக் கூடாது என்று நமக்கு எச்சரிப்பும் விடுக்கப்பட்டு இருக்கிறது. *'சபை கூடிவருதலைச் சிலர் விட்டு விடுகிறது போல நாம் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும்* [எபிரேயர் 10:25]. வாரத்தின் முதல் நாள்தோறும் கர்த்தரை ஆராதிக்க கர்த்தருடைய ஜனங்களோடு கூடுவது எவ்வளவு ஒரு கனமும் சிலாக்கியமுமான காரியமாய் இருக்கிறது. இதை நாம் ஒரு கடமையாகவோ அல்லது ஒரு பணியாகவோ எடுக்கக் கூடாது. மாறாக, இதை நாம் ஒரு சிலாக்கியமாகக் கருத வேண்டும். நாம் அப்படியே கர்த்தருடைய ஜனங்களோடு கூடும் போது கர்த்தர் நம் நடுவில் இருப்பதாக வாக்குத்தத்தம் செய்து இருக்கிறார். அது மாத்திர மில்லாமல் நம்மோடு கனம் பொருந்திய விருந்தாளியாக இருப்ப தாகவும் அவர் வாக்குரைத்திருக்கிறார். 'ஏனெனில், *இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்'(மத்தேயு 18:20).*

6. நமக்கு ஐக்கியத்தின் ஆசீர்வாதம் இருக்கிறது. அப்போஸ்தலர் 2 : *42 'அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந் நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்'.* கிறிஸ்தவர்களாகிய நமக்கு நம்முடைய சக கிறிஸ்தவர்கள் நமக்குத் தரும் உதவியும் உற்சாகமும் அவசியமாய் இருக்கிறது. இது வாரத்தின் முதல் நாள் தோறும் சபை கூடி வருவதின் நோக்கங்களில் ஒன்றாக இருக்கிறது. நாம் ஒன்று கூடுவதன் மூலமாகவும், ஆராதிப்பதன் மூலமாகவும், பணி செய்வதன் மூலமாகவும், வரும் ஐக்கியம் ஒரு மிகப்பெரிய ஆசீர்வாதம் ஆகும்.

7. நமக்கு ஜெபம் என்னும் சிலாக்கியம் உண்டு. தேவன் எல்லோ ருடைய ஜெபங்களையும் கேட்பதில்லை. பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம். ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் *சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார்'* [யோவான் 9:31]. வேறுவிதமாகச் சொன்னால், ஜெபம் ஆனது தேவனைத் தன் பிதாவாக அணுகும் ஒவ் வொரு தேவனுடைய பிள்ளைக்காகவும் நியமிக்கப்பட்டிருக்கிறது.

இருந்தபோதிலும் ஒருவருடைய ஜெபம் கேட்கப்பட்டு அதற்கு பதில் அளிக்கப்பட வேண்டும் என்றால் அந்த ஜெபம் தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக இருக்க வேண்டும். 'நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்' [1 யோவான் 5:14]. நாம் தொடர்ந்து பார்க்கும் போது எபிரேய ஆசிரியர் இவ்விதமாய் சொல்வதைப் பார்க்க முடியும்.

*ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத் தண்டையிலே சேரக்கடவோம்* '[எபிரேயர் 4:16]. இங்கே இந்த ஆசிரியர் ஜெபம் என்னும் மாபெரும் ஆசீர்வாதம் பற்றிப் பேசுகிறார். நம்முடைய தேவைகள் பிரச்சனைகள் எப்படிப்பட்டதாக இருந்தாலும் சரி, அவைகளை நாம் கர்த்தரிடத்தில் எடுத்துச் செல்ல வேண்டும். நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறபடியால் அவரிடத்தில் ஜெபத்தின் மூலமாகப் பேச முடியும் என்பதை அறிந்தும் அவர் நம் விண்ணப்பங்களுக்கு செவி கொடுப்பார் என்கிற விசுவாசத்தோடும் நம் ஜெபங்களை ஏறெடுக்க வேண்டும்.

8. வாரத்தின் முதல் நாள்தோறும் கர்த்தருடைய பந்தியில் பங்கெடுப்பதன் மூலமாக அவரை நினைவு கூரும் சிலாக்கிய நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. பவுல் இதை இவ்விதமாகச் சொல்கிறார். '*நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்து வினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?*' [1 கொரிந்தியர் 10:16].

கிறிஸ்துவின் சரீரத்தையும், ரத்தத்தையும் நினைவு கூருவதன் மூலமாக நமக்காக மரித்த அவருக்கு மரியாதை செலுத்துவது நமக்கு கிடைத்த மாபெரும் ஆவிக்குரிய ஆசீர்வாதம் ஆகும்.

9. நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்ததன் காரணமாக பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றிருக்கிறோம். இது மறுபடியும் நமக்கு அப்போஸ்தலர் 2:38 யை நினைப்பூட்டுகிறது. அங்கே பேதுரு மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானத்தின் மூலமாக நாம் பாவ மன்னிப்பையும், பரிசுத்த ஆவியின் வரத்தையும் பெற்றிருக்கிறோம் என்று சொல்லுகிறார். தேவனும், கிறிஸ்துவும் பரிசுத்த ஆவியான வரும் நம்மில் வாசம் செய்வது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம். அதற்கு ஈடு இணையே இல்லை.

10. கர்த்தருக்காக இப்பூமியில் வாழ இப்பூமியில் அவரை பிரதிநிதித் துவப்படுத்த நாம் ஆசீர்வதிக்கப்பட்டு இருக்கிறோம்.' *வார்த்தை களினாலாவது கிரியைகளினாலாவது, நீங்கள் எதைச்செய்தாலும்*

*அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்' (கொலோசெயர் 3:17).'முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்'* என்று கிறிஸ்து தாமே சொன்னார் (மத்தேயு 6:33).

11. கர்த்தர் நம்மோடு சதா காலங்களிலும் இருப்பார் என்பதை அறிந்தவர்களாய் மற்றவர்களுக்குக் கர்த்தருடைய வழியை போதிப்பதில் நாம் மகிழ்ச்சி கொள்ள வேண்டும். நம் சத்தியத்தை போதித்து அவர்களைக் கிறிஸ்துவுக்குள்ளாக வழிநடத்துதல் மூலமாக நாம் இந்த ஒட்டு மொத்த உலகத்திற்கும் மிகப்பெரிய ஆசீர்வாதமாக இருக்க முடியும். அது மாத்திரம் அல்ல, நாம் கர்த்தருடைய சித்தத்தை செய்யப் பாடுபடும்போது அவர் என்றென்றும் நம்மோடு இருப்பதாக வாக்குத்தத்தம் செய்திருப்பது எவ்வளவு ஆசீர்வாதமான காரியம். கிறிஸ்துவின் வாயின் வார்த்தைகளைக் கேளுங்கள் '*ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்.* ஆமென். (மத்தேயு 28:19,20).

12. கடைசியாக, நாம் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து அவருக்கு மரண பரியந்தம் உண்மை உள்ளவர்களாக இருந்தால் அவர் நமக்கு ஜீவ கிரீடத்தை அல்லது நித்திய ஜீவனைத் தருவதாக வாக்குத்தத்தம் செய்து இருக்கிறார். *'ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்' வெளிப்படுத்தல் 22:14).'நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே, இதோ, நீங்கள் சோதிக்கப் படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான், பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரண பரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்'* (வெளிப்படுத்த 2:10).

இப்போது கர்த்தர் தம்முடையவர்களுக்காக அக்கறைபடு வதில்லை என்று யார் சொன்னது? கிறிஸ்தவ வாழ்க்கை மகிழ்ச்சியான வாழ்க்கை அல்ல என்று யார் சொன்னது? கிறிஸ்தவ வாழ்க்கையில் எந்த பிரயோஜனம் இல்லை என்று யார் சொன்னது? கிறிஸ்தவர் களுக்கு அவர்கள் எதிர் நோக்குவதற்கு என்று எதுவுமே இல்லை என்று யார் சொன்னது? உண்மையாகவே கிறிஸ்தவ வாழ்க்கை தான் மிகச் சிறந்ததும், பலன் அளிக்கக் கூடிய ஒன்றாகவும் இருக்கிறது.

கிறிஸ்தவ ஜீவியத்தில் ஒருவர் பாவத்திலிருந்து விடுதலை ஆக்கப்படுகிறார். அதன் காரணமாக ஒரு சமாதானமான வாழ்க்கை வாழ்கிறார். அது மாத்திரமல்ல, கிறிஸ்தவ ஜீவியத்தில் ஒருவர் எதிர் நோக்குவதற்கு என்று ஏராளமான காரியங்கள் உண்டு. ஒருவர் கிறிஸ்தவ ஜீவியத்தில் சரீர பிரகாரமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் ஆசீர்வதிக்கப்படுகிறார். ஒருவர் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும் போது இவைகள் எல்லாம் ஆரம்பமாகிறது. இது உண்மையில் ஒருவருடைய வாழ்க்கையின் ஆரம்பப் புள்ளியாகவும் இருக்கிறது. இதுவே எல்லை இல்லா ஆசீர்வாதங்களின் ஆரம்பமாகவும் இருக்கிறது.

## கேள்விகள்

1. ஒருவர் நற்செய்தியின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள என்ன செய்ய வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார்?
2. எபேசியர் 1:3] வசனங்களை வாசித்து அதை விவாதி
3. ஒருவர் கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிவதால் எதைப் பெற்றுக் கொள்கிறார்?
4. ஒருவர் கிறிஸ்துக்குள்ளாக எப்படி வருகிறார்?
5. இதற்கு ஆதாரமாக சில வசனங்களைத் தருக
6. எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் எங்கே இருக்கின்றன?
7. ஒருவர் எவ்விதமாக சபைக்குள் பிரவேசிக்கிறார்?
8. கிறிஸ்துவின் சரீரத்தைப் பற்றி விவரி
9. உலகத்திலேயே மிகப்பெரிய அமைப்பு எது? ஏன் அது பெரிதாக இருக்கிறது?
10. பேதுரு 4:16யை மேற்கோள் காட்டுக
11. எந்த நாமத்தில் இரட்சிப்பு இருக்கிறது?
12. யாரெல்லாம் தம்மை ஆராதிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்?
13. ஏன் நாம் சபை கூடி வருதலை விட்டுவிடக் கூடாது என்று எச்சரிக்கப்பட்டிருக்கிறோம்?
14. ஒவ்வொரு ஆராதனை நேரத்திலும் யார் சிறப்பு விருந்தாளியாக இருக்கிறார்?
15. ஐக்கியத்தின் தேவையை விளக்குக

16. பாவிகளின் ஜெபத்தை தேவன் கேட்கிறாரா?

17. யாருக்காக ஜெபம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது?

18. நாம் எப்படி ஜெபிக்க வேண்டும்?

19. கர்த்தருடைய பந்தியின் நோக்கத்தை எழுதுக

20. ஒவ்வொரு கிறிஸ்தவரும் எந்த வரத்தைப் பெறுகிறார்?

21. யாருக்கு முதலிடத்தை நம் ஜீவியங்களில் கொடுக்க வேண்டும்?

22. நாம் மற்றவர்களுக்கு போதிக்கத்தக்கதாக எவ்விதங்களில் எல்லாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம்?

23. யாருக்கு ஜீவ கிரீடத்தைக் கர்த்தர் கொடுப்பார்?

24. ஒருவர் கிறிஸ்தவராக இருப்பதினால் பலன் உண்டா?

பாடம்–11

# நற்செய்தியைப் பிரசங்கித்தல்

## Preaching the Gospel

**ந**ம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கீழ்க்கண்டவாறு சொன்னார். *'ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ் நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்.* ஆமென். [மத்தேயு 28:19,20]. மேலும், கர்த்தர் இவ்விதமாகவும் சொன்னார்: 'பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும்போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷ த்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான்'[மாற்கு 16:15,16].

மேற்சொல்லப்பட்ட வாக்கியங்களில் இருந்து சில காரியங்களை உற்று நோக்குவது அவசியமாயிருக்கிறது:

1. இயேசு கிறிஸ்து அப்போஸ்தலர்களைப் போகும்படி கட்டளை யிட்டார். கர்த்தர் அப்போஸ்தலர்களை போகும்படி மாத்திரம் சொல்ல வில்லை, அவர்கள் எங்கே போக வேண்டும் என்றும் சொன்னார். அவர்கள் உலகில் உள்ள எல்லா நாடுகளுக்கும் செல்ல வேண்டும் என்று கர்த்தர் கட்டளை இட்டார். இக்கட்டளையில் எல்லோரும் உள்ளடக்கம். யாரும் விடுபடக் கூடாது என்பது பொருளாக இருக்கிறது. இன்று போல் போக்குவரத்தும், தகவல் தொடர்பு சாதனங்களும் இல்லாத காலகட்டங்களில் இக்கட்டளையை நிறை வேற்றுவது மிகப்பெரிய பணியாக இருந்தது. இருந்த போதிலும் இது கர்த்தருடைய கட்டளையாக இருந்தது. அப்போஸ்தலர்களால் செய்ய முடியாத காரியத்தைச் செய்யும்படி நம் கர்த்தர் நிச்சயமாக கட்டளை யிட்டு இருக்க மாட்டார்.

2. அப்போஸ்தலர்கள் புறப்பட்டு போய் பிரசங்கிக்க வேண்டும் என்று இயேசு கட்டளையிட்டு இருந்தார். இவ்விதமாக நம் கர்த்தர் கட்டளையிட்ட போது எதைப் பிரசங்கிக்க வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்தி விட்டார். நம் கர்த்தர் சுவிசேஷம் தான் பிரசங்கிக்கப்பட வேண்டும் என்று கட்டளை கொடுத்ததார். இக்கட்டளை தவறாகப் புரிந்து கொள்ளப்படவில்லை என்பதை நிச்சயப்படுத்துவதற்காக கீழ்க்கண்டவாறு சொன்னார். *விசுவாசள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான்' (மாற்கு 16:16).*

3. சுவிசேஷத்துக்கு கீழ்ப்படிய விரும்புகிறவர்களுக்கு அப்போஸ் தலர்கள் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்று இயேசு சொன்னார். முதலாவதாக, சுவிசேஷத்தை உல கெங்கும் எடுத்துச் செல்ல வேண்டும் என்னும் பொறுப்பை அப்போஸ் தலர்கள் மீது வைத்தார் என்பதை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஜனங்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பது அப்போஸ்தலருடைய பொறுப்பாய் இராமல், முதலில் அந்த சுவி சேஷம் எல்லோருக்கும் எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்பதுதான் அப்போஸ்தலர்களின் பொறுப்பாக இருந்தது. இருந்தபோதிலும், சுவிசேஷம் பிரசிங்கிக்கப்பட்ட பிறகு அதற்குக் கீழ்ப்படிய ஜனங்கள் விரும்பினால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்று கர்த்தர் அப்போஸ்தலர்களுக்கு கட்டளையிட்டார். பின்பு கர்த்தர் ஞானஸ்நானம் எவ்விதமாக கொடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக இவ்விதமாகச் சொன்னார். '*ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து*' என்று [மத்தேயு 28:19]. மறுபடியும், இந்தக் காரியத்தில் எவ்விதமான தவறான புரிந்து கொள்ளுதலும் இருக்கக் கூடாது என்று கர்த்தர் விரும்புகிறார்.

4. கடைசியாக, இயேசு கிறிஸ்து சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்தவர் களுக்கு இன்னும் அதிகமாகப் போதிக்கப்பட வேண்டும் என்று கட்டளையிட்டார். இங்கே நம் கர்த்தருடைய கட்டளை அப்போஸ் தலர்கள் உலகெங்கும் போய் சுவிசேஷத்தை எல்லோருக்கும் பிர சங்கிக்க வேண்டும். அதன் பிறகு கர்த்தருக்கு கீழ்ப்படிய விரும்பு கிறவர்களுக்கு அவர்கள் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்பதாகத்தான் இருக்கிறது என்பதை கவனிக்க வேண்டும். இது நடந்து முடிந்த பிறகு மற்றொரு பொறுப்பு வந்து சேருகிறது. அது என்னவென்பதை இயேசுவின் வார்த்தைகளிலேயே கேட்போம். '**நான்** உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும் படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென் [மத்தேயு 28:20]. சுவிசேஷத்தின் மூல உபதேசங் களுக்கு கீழ்படிந்தவர்களை அப்படியே ஆவிக்குரிய பிரகாரமாக மரிக்க விட்டுவிடாமல், கிறிஸ்தவ வாழ்க்கையை வாழும் விதத்தை அவர்களுக்கு மென்மேலும் தொடர்ந்து போதிக்க வேண்டும் என்று கட்டளையிட்டார். இவ்விதத்தில் இயேசு கிறிஸ்து அவர் களுடைய உடனடி இரட்சிப்பில் மாத்திரம் விருப்பம் காட்டாமல் அவருடைய நித்திய இரட்சிப்பிலும் விருப்பம் காட்டினார். இயேசு கிறிஸ்து சுவிசேஷம் யாருக்கு போதிக்கப்பட்டதோ அவர்கள் உண்மை உள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ விரும்பினார். இந்த ஆயத்தத்தை

கூடுதலான உபதேசத்தினால் மாத்திரமே செய்ய முடியும். அப்போஸ் தலருடைய நடபடிகள்1:8 க்கு நம் திரும்பும் போது சுவிசேஷம் எந்தெந்த இடங்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்பது பற்றிய கர்த்தருடைய திட்டம் விவரமாக செல்லப்பட்டுள்ளது. '*பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தம், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.* [அப்போஸ்தலர் 1:8].

சுவிசேஷப் பிரசங்கம் முதலில் எருசலேமில் இருந்து தான் ஆரம்பம் ஆக வேண்டியதாக இருந்தது. அப்போஸ்தலருடைய நடபடிகள் ஒன்று, இரண்டு அதிகாரங்களிலே நாம் இந்தப் பின்னணி யை பார்க்க முடியும். அப்போஸ்தலர்கள் எருசலேமில் இருந்தார்கள், பெந்தேகொஸ்தே நாள் வந்தது, உலகெங்கிலும் உள்ள யூதர்கள் அங்கே வந்து கூடியிருந் தார்கள். அப்போது அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப் பட்டு பற்பல பாஷைகளிலே பேசினார்கள். அதன் பின்பு அவர்கள் முதல் முறையாக சுவிசேஷத்தைப் பிரசிங்கிக்கத் தொடங்கினார்கள். அதன் விளைவாக சுமார் 3000 பேர் தேவனுடைய வார்த்தையை சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, சபையிலே சேர்க்கப்பட்டார்கள். அந்தப் பெந்தகொஸ்தே நாளிலே உலகெங்கிலும் இருந்து ஜனங்கள் எருசலேமிலே கூடினபடியால் சுவிசேஷப் பிரசங்கம் அங்கே இருந்து ஆரம்பமாகவும், அங்கே கூடி வந்தவர்கள் அதைத் தாங்கள் வாழும் பகுதிகளுக்கு எடுத்துச் செல்லவும் ஏதுவாய் இருக்கும்படி தேவன் திட்டமிட்டு இருந்தார். உதாரணமாக, எருசலேமுக்கு அந்தப் பெந்தகொஸ்தே நாளில் ரோமாபுரியில் இருந்து புதிதாக வந்திருந்தார்கள். அதன் பின்பு, பவுல் ரோமாபுரிக்கு போவதற்கு முன்பாகவே அங்கே கிறிஸ்துவின் சபை இருந்ததை நாம் வேத வாக்கியங்களில் வாசிக்கிறோம். அதைப்போல் பேதுருவோ அல்லது மற்ற அப்போஸ்தலர்களோ ரோமாபுரியில் சபை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாக அங்கே போனதாக நாம் எங்கேயும் வாசிக்க முடியாது. அப்படியென்றால், இங்கே விளக்கம் என்ன? ரோமாபுரியில் இருந்து எருசலேக்குப் புதிதாய் வந்தவர்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து, தங்கள் நாட்டுக்கு திரும்பி போய், தங்கள் சொந்த ஜனங்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்தார்கள், அதன் காரணமாக அங்கே சபை ஸ்தாபிக்கப்பட்டது.

2. சுவிசேஷம் யூதேயா முழுவதும் பிரசங்கிக்கப்பட வேண்டியதாக இருந்தது. இயேசு கிறிஸ்துவும் எருசலேமைச் சுற்றிலும் அந்தப் பகுதியில் தான் ஊழியம் செய்து கொண்டிருந்தார். எனவே, அருகாமையில் இருந்த ஜனங்களுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பது அவருக்கு நோக்கமாக இருக்கவில்லை. எனவே, அதைத் தொடர்ந்து எருசலேமிலும் யூதோயம் முழுவதும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது.

அதன் பிறகு ஸ்தேவான் மரணம் பற்றி நாம் வாசிக்கிறோம். [அப்போஸ்தலர் 8 : 1]

'அவனைக் கொலைசெய்கிறதற்குச் சவுலும் சம்மதித்திருந்தான். அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர் தவிர, மற்ற யாவரும் யூதேயா, சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப்போனார்கள்'. அதைத்தொடர்ந்து சிதறிப் போனவர்களைக் குறித்து நாம் வாசிக்கிறோம். 'சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்' [அப்போஸ்தலர் 8 : 4]. எனவே, யூதேயா முழுவதும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது.

அடுத்ததாக, சுவிசேஷம் சமாரியா நாட்டு ஜனங்களுக்கு கொண்டு செல்லப்பட வேண்டியதாய் இருந்தது. 'அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப்போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான். பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டுக் கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள் [அப்போஸ்தலர் 8:5,6]. 'தேவனுடைய ராஜ்யத்துக்கும், இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்' [அப்போஸ்தலர் 8:12]. பின்பு பேதுருவும் யோவானும் இந்த ஜனங்களைச் சந்தித்த பிறகு வேத வாக்கியம் இவ்விதமாகச் சொல்கிறது. 'இவ்விதமாய் அவர்கள் கர்த்தருடைய வசனத்தைச் சாட்சியாய் அறிவித்துச் சொன்னப் பின்பு, சமாரியருடைய அநேக கிராமங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, எருசலேமுக்குத் திரும்பி வந்தார்கள்' [அப்போஸ்தலர் 8:25]. எனவே, கர்த்தருடைய திட்டத்தின்படி சமாரியர் சுவிசேஷத்தை கேட்டார்கள்.

4. கடைசியாக, சுவிசேஷம் உலகெங்கும் கொண்டு செல்லப்பட வேண்டியதாய் இருந்தது. சுவிசேஷம் உலகம் முழுவதும் கொண்டு செல்லப்பட்டது. என்பதை நிரூபிப்பதற்காக பவுல் இவ்விதமாகச் சொன்னார். *அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டுவருகிறது. அதற்கென்றே பவுலாகிய நான் ஊழியக்காரனானேன்'(கொலோசெயர் 1:23).* எனவே, உலகம் முழுவதும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் கர்த்தருடைய திட்டமானது 30 ஆண்டுகளுக்கு உள்ளாகவே நிறைவேற்றப்பட்டது.

இந்த உலகத்திற்கு கிறிஸ்துவின் சுவிசேஷம் அவசியமாய் இருக்கிறது. இந்த உலகத்தின் நம்பிக்கையே சுவிசேஷம் தான். இவ்வுலகத்தை மாற்றும், இரட்சிக்கும் ஒன்றே ஒன்று சுவிசேஷம் தான். நற்செய்தியைப் பெற்றிருக்கும் நாம் அது உலகெங்கும் பிரசங்கிக்கப்படுவதை *உறுதி செய்ய வேண்டும்.*

# கேள்விகள்

1. மத்தேயு 28:19,20 மற்றும் மாற்கு 16:15,16 வசனங்களை வாசித்து விவாதி.
2. யார் போக வேண்டும் என்று கர்த்தர் கட்டளையிட்டார்?
3. அவர்கள் போக வேண்டுமென்று கர்த்தர் எங்கே சொன்னார்?
4. நம் கர்த்தர் செய்ய முடியாததை செய்யச் சொன்னாரா?
5. நம் கர்த்தர் அவர்கள் எதை போதிக்க வேண்டும் என்று கட்டளையிட்டார்?
6. யாருக்கு அப்போஸ்தலர்கள் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்?
7. யாருடைய நாமத்தில் அவர்கள் ஞானஸ்நானம் பெற வேண்டும்?
8. ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு அப்போஸ்தலர்கள் எவைகளை போதிக்க வேண்டும்?
9. ஏன் மத்தேயு 28:19,20 மற்றும் மாற்கு 16:15,16 பிரதான கட்டளைகள் என்று அழைக்கப்படுகின்றன?
10. அப்போஸ்தலருடைய நடபடிகள் 1:8 யை மேற்கோள் காட்டுக
11. அவர்கள் உலகம் முழுவதும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல வேண்டிய இடங்களைக் குறிப்பிடுக
12. சுவிசேஷம் எங்கே இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டியதாயிருந்தது?
13. அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் நடந்தவைகளை விவாதி
14. எப்படி சுவிசேஷம் உலகம் முழுவதும் பரவ முடிந்தது?
15. யூதேயா முழுவதும் சுவிசேஷம் பரவ எது சாத்தியப்படுத்தியது?
16. யார் சுவிசேஷத்தை சமாரியாவுக்கு எடுத்துச் சென்றது?
17. சுவிசேஷம் உலகம் முழுவதும் எடுத்துச் செல்லப்பட்டதா? யார் அப்படி சொன்னது? எங்கே அப்படி சொல்லப்பட்டிருக்கிறது?
18. இன்று நம்முடைய வேலை என்னவாய் இருக்கிறது?
19. நாம் அதைச் செய்ய முடியுமா?
20. நாம் விரும்பியபடி பயன்படுத்தத்தக்கதாக நம்மிடத்தில் காணப்படும் சில சௌகரியங்களை பட்டியலிடு.
21. இந்த உலகத்திற்கு நற்செய்தி தேவையா? ஏன் தேவை?

பாடம்–12

# வேறொரு நற்செய்தியைப் பிரசங்கித்தல்

# Preaching Other Gospels

**பு**திய ஏற்பாடு இயேசு கிறிஸ்துவின் ஒரே சுவிசேஷம் பிரசிங்கிப்பதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினாலும் கூட, அது மற்ற சுவிசேஷங்கள் பற்றியும் பேசுகிறது. 2 கொரி 11 : 4'எப்படியெனில், *உங்களிடத்தில் வருகிறவன் நாங்கள் பிரசங்கியாத வேறொரு இயேசுவைப் பிரசங்கித்தானானால் அல்லது நீங்கள் பெற்றிராத வேறொரு ஆவியையும், நீங்கள் ஏற்றுக்கொள்ளாத வேறொரு சுவிசேஷத்தையும் பெற்றீர்களானால் நன்றாய்ச் சகித்திருப்பீர்களே'.* மேலும், பவுல் தொடர்ந்து சொல்லும் போது இவ்விதமாக சொல்கிறார். ஆகையால், அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சரியமல்லவே; அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத் தக்கதாயிருக்கும். (II கொரி11:15)

பவுல் கலாத்தியருக்கு இவ்விதமாக எழுதினார். உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்கு திரும்புகிறதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன். வேறொரு சுவிசேஷம் இல்லையே. சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன். நீங்கள் ஏற்றுக் கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்' (கலாத்தியர் 1:6–9). இங்கே அப்போஸ்தலன் என்ன சொல்லுகிறார்? நாம் கீழ்க்காணும் காரியங்களை கவனிப்போம்:

1. கலாத்தியர்கள் இயேசு கிறிஸ்துவின் தூய சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டார்கள்.

2. ஆனால், சீக்கிரமாக அவர்கள் வேறொரு சுவிசேஷத்துக்குத் திரும்பியது குறித்து பவுல் ஆச்சரியப்பட்டார். இருந்தபோதிலும் வேறொரு சுவிசேஷம் இல்லை என்பதை அவர் தெளிவுபடுத்தி விடுகிறார்.

3 அவர்களுக்குள் சிலர் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை மாற்றி அல்லது திரித்துப் பிரசிங்கித்து ஜனங்களை தவறான வழியில் நடத்தினார்கள்.

4. பவுல் தன்னோடு சேர்த்து, 'நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன்' (கலாத்தியர் 1:8) என்றார்.

இதன் பொருள் சுத்தமான சுவிசேஷம் ஏற்கனவே பிரசங்கிக்கப்பட்டு விட்டது. எனவே, அதோடு முரண்பட்டு பிரசங்கிக்கப்படும் எதுவும் சுத்தமான சுவிசேஷமாக இருக்க முடியாது. மேலும், வேறொரு சுவிசேஷத்தை பிரசங்கிக்கிறவன் யாராக இருந்தாலும் சரி, அந்த நபர் இவ்வுலகத்தில் உள்ளவராக இருந்தாலும் சரி, வானத்தில் உள்ளவராக இருந்தாலும் சரி அப்படி சுவிசேஷத்தைப் புரட்டி கர்த்தருடைய ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளலாம் என்று எதிர்பார்க்க முடியாது. அப்படிப்பட்ட நபர் கடுமையான விளைவுகளை எதிர்கொண்டுதான் ஆக வேண்டும்.

5. பவுல் எச்சரிப்பை மறுபடியும் வலியுறுத்துகிறார். அது மாத்திர மல்ல, கர்த்தருடைய திட்டத்தில் வேறொரு சுவிசேஷத்திற்கு இடமே இல்லை என்பதையும் பவுல் இங்கே தெளிவுபடுத்துகிறார். வேதாகமத்தில் இடம்பெற்றிருக்கிற சுவிசேஷத்திற்கு எதிராக வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதென்பது அபாயகரமான ஒன்று. ஏனென்றால், இப்படி செய்கிறவர் மீது தேவனுடைய சாபம் நிலைத்திருக்கும். ஏன் அப்படி? ஏனென்றால், கர்த்தர் வேறொரு சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் அதிகாரத்தையோ அல்லது உரிமையையோ எந்த மனிதனுக்கும் கொடுக்கவில்லை.

இந்த நாட்களில் பலவிதமான சுவிசேஷங்கள் பிரசிங்கிக்கப் படுவது பற்றி நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம். அதாவது, அநேக ரட்சிப்பின் திட்டங்கள், முரண்பாடு உள்ள உபதேசங்கள் இன்றைய நாட்களில் பிரசங்கிக்கப்படுகிறது. எது உண்மையான சுவிசேஷம்? நமக்கு பிரசங்கிக்கப்படுகிற சுவிசேஷம் சரியானது தான் என்பதை நாம் எப்படி அறிந்து கொள்ளலாம்? கீழ்க்காணும் ஆலோசனைகளை கருத்தில் கொள்ளுங்கள்.

1. சுவிசேஷம் சம்மந்தமான சத்தியத்திற்கு வேதாகமத்திற்கு திரும்புங்கள். கிறிஸ்துவின் நற்செய்தி சம்பந்தமான எல்லா

உண்மைகளுக்கும் தேவனுடைய புத்தகமே ஆதாரமாய் இருக்கிறது. வேதாகமத்தின் பக்கங்களில் சுவிசேஷத்தின் உண்மைகளைப் பற்றியும், சுவிசேஷத்தின் கட்டளைகள் பற்றியும் நீங்கள் வாசிக்க முடியும் [1 கொரிந்தியர் 15:1–4;மாற்கு 16:15,16; அப்போஸ்தலர்2:38]. தேவன் தம்முடைய வார்த்தையின் மூலமாக உங்களிடம் பேச நீங்கள் அனுமதிக்கும் போது உங்கள் சந்தேகங்கள், தவறான புரிந்து கொள்ளுதல் மற்றும் கேள்விகளுக்குத் தெளிவு கிடைக்கும்.

2. வேத வாக்கியங்களின் உபதேசங்களோடு முரண்படுகிற எந்த ஒரு இரட்சிப்பின் சுவிசேஷ திட்டத்தின் போதனைகளையும் நிராகரியுங்கள். இந்த விஷயத்தில் மனிதன் தன் சொந்த அபிப்ராயங்களையும், எண்ணங்களையும் புகுத்த தேவன் அவனுக்கு அதிகாரம் கொடுக்கவில்லை. நிச்சயமாகவே, சரியாக சிந்திக்கும் எந்த ஒரு நபரும் இரட்சிப்பின் சுவிசேஷ திட்டம் சம்மந்தமான எந்த ஒரு தவறான உபதேசத்தையும் ஏற்றுக் கொள்ள மாட்டார்.

3. மார்க்க பிரிவினைக் கூட்ட பிரசங்கியார்களால் அறிவிக்கப்படும் சுவிசேஷங்கள் வேதாகமத்தின் தூய சுவிசேஷமாக இருக்க முடியாது. கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு நீங்கள் கீழ்ப்படியும்போது அது உங்களை மார்க்க பிரிவினை கூட்டங்களுக்கு கொண்டு செல்லாது என்பதை மனதில் எப்போதும் கொள்ளுங்கள். மாறாக, கிறிஸ்துவின் உண்மையான சுவிசேஷத்துக்கு நீங்கள் கீழ்ப்படியும்போது ,அது ரட்சிப்புக்கு வழி வகுத்து, நீங்கள் கர்த்தருடைய சபையிலே சேர்க்கப்படுவீர்கள். எனவே,அது உங்களை கிறிஸ்தவர்களாக மாத்திரமே மாற்றும் [அப்போஸ்தலர்11:26]

4. பெரும்பாலான ஜனங்கள் கேட்டுக்குப் போகிற விசாலமான வழியில் தான் பயணிக்கிறார்கள் என்பதை மனதில் வையுங்கள்[ மத்தேயு 7:13,14]. பெரும்பாலானவர்கள் வேறே சுவிசேஷங்களை நம்புகிறபடியால் அவைகளை போதிக்கிறவர்கள் சில வேளைகளில் இவர்களுக்குப் பிடித்ததமானவர்களாகி விடுகிறார்கள்.

5. இந்த நாட்களில் பிரசங்கிக்கப்படும் நவீன பிரசங்கங்கள் பிரிவினையைத்தான் அடையாளப்படுத்துகின்றன. அவைகள் பிரிவினையை ஊக்கப்படுத்துகின்றன. மறுமுனையில் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷமோ ஒற்றுமையையும், ஒருமைத் தன்மையையும், சமாதானத்தையும், ஊக்கப்படுத்துகிறது அல்லது மேம்படுத்துகிறது.1கொரிந்தியர் 1 மற்றும் பன்னிரண்டாம் அதிகாரங்களை வாசியுங்கள். பின்பு யோவான் 17 ஆம் அதிகாரத்தில் நம் கர்த்தர் அப்போஸ்தலர்களும், அவருடைய உபதேசங்களை விசுவாசிப்பவர்களும் ஒன்றாயிருக்க வேண்டும் என்று எப்படி ஜெபித்தார் என்பதை நாம் வாசிக்க முடியும்.

6. கடைசியாக, இந்த வேறே சுவிசேஷங்கள் யாரையும் இரட்சிப்ப தில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். இந்த வேறே சுவிசேஷங்கள் இவைகளை பிரசங்கிக்கிறவர்களையும் இவர்களை ஏற்றுக் கொள்பவர்களையும் இழந்து போகச் செய்கின்றன. கிறிஸ்துவின் சுத்த சுவிசேஷத்திற்கு மாத்திரமே இரட்சிக்கும் வல்லமை உண்டு. [ரோமர்1:16,17].

தவறானவைகளை பிரசங்கிப்பது மற்றும் போதிப்பதன் மூலமாகத் தான் பிரிவினை உண்டாகிறது. எனவே தான், பவுல் இவ்விதமாக எச்சரிக்கிறார் '*அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.*

அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வுக்கு ஊழியஞ்செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ் செய்து, நயவசனிப்பினாலும், இச்சகப்பேச்சினாலும் கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்' [ரோமர் 16:17,18].

இவ்வசனங்களின்படி இப்படிப்பட்ட பிரசங்கியார்களை நாம் குறித்து வைத்துக் கொண்டு அவர்களைத் தவிர்க்க வேண்டும். யோவான் இவ்விதமாக எழுதினார்: '*கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன்; ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள்.* அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான்' [2 யோவான் 1:9–11]. பின்பு கிறிஸ்து இவ்விதமாக எச்சரித்தார். '*இந்தப் புத்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புத்தகத்தின் வசனங்களி லிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுத்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டவை களிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்' (வெளி. 22:18,19).*

வேறே சுவிசேஷங்களைப் போதிக்கிறவர்கள் அவர்கள் என்ன போதிக்கிறார்களோ அதில் நேர்மையாயும், உண்மையாயும் இருக்கலாம். ஆனால், அவர்கள் ஏமாற்றப்பட்டு இருக்கிறார்கள். ஆயினும், அது அவர்கள் தவறை போதிக்கிறார்கள் என்னும் உண்மையிலிருந்து அவர்களை நீக்கிப் போடாது. அவர்கள் தேவனுக்கு அதைக் குறித்துக் கணக்கு கொடுக்க வேண்டும். அதே நேரத்தில் அவர்களில் சிலர் நேர்மையற்றவர்களாகவும், முரண்படுகிறவர் களாகவும் இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், அவர்கள் கூலிக்காக பணியமர்த்தப்பட்ட ஆட்களாக இருக்கிறார்கள். அவர் களுக்கு ஆத்துமாக்கள் மீது எந்த அக்கறையும் இல்லை. ஆயினும், அவர்கள் ஊழியத்தை செய்கிறார்கள். அவர்கள் மாதந்தோறும் சம்பளம் வாங்கும் வரை அவர்கள் என்ன போதிக்கிறார்கள் என்பது பற்றி அவர்களுக்கு கவலை இல்லை. நாம் எவ்விதத்திலும் அவர்களால் வஞ்சிக்கப்படாமல் இருக்க வேண்டும்.

இன்றைய நாட்களில் மார்க்கப் பிரிவினைக் கூட்டத்தார் அதிகமாக ஒற்றுமை பற்றி பேசுகிறார்கள். அப்படி பேசிக் கொண்டிருந்தாலும் கூட, அவர்கள் அதிக அதிகமாக பிரிந்து போகிறார்கள். அவர்கள் உண்மையாகவே ஒற்றுமையை விரும்பினால் ஒரே சுவிசேஷத்தி ற்காக வேதாகமத்திற்கு திரும்ப வேண்டும். அது மாத்திரமல்ல, அந்த ஒரே சுவிசேஷத்தை அவர்கள் பிரசங்கிக்க வேண்டும். அதன் பலன் நிச்சயமாக ஒற்றுமையாகத் தான் இருக்கும்.‘ *நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பி னதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன் (யோவான் 17:20-23).*

## கேள்விகள்

1. சுத்த சுவிசேஷம் ஒன்றுக்கு மேல் இருக்கிறதா?
2. II கொரிந்தியர் 11:13–15 கலாத்தியர்1:6–9 வசனங்களை வாசியுங்கள்.

3. கலாத்தியருக்கு பிரசங்கித்தது யார்?
4. எந்த சுவிசேஷத்திற்கு கலாத்தியர்கள் திரும்பினார்கள்?
5. வேறே சுவிசேஷத்தை பிரசிங்கத்தவர்களுக்கு என்ன நடக்கும்?
6. இன்றைய நாட்களில் வேறு சுவிசேஷங்கள் பிரசிங்கிக்கப் படுகின்றனவா?
7. எது கிறிஸ்துவின் சுத்த சுவிசேஷம்?
8. கிறிஸ்துவின் சுவிசேஷம் சம்மந்தமான உண்மைகளை அறிந்து கொள்ள எந்த புத்தகத்திற்கு நாம் திரும்ப வேண்டும்?
9. வேத வாக்கியங்களோடு முரண்படும் எந்த ஒரு உபதேசமும் சத்தியத்திற்கு அடையாளமாக இருக்க முடியுமா?
10. மனிதன் தன் சொந்த அபிப்ராயங்களையும், எண்ணங்களையும் புகுத்த அவனுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதா?
11. மார்க்கப்பிரிவினை கூட்டப் பிரசங்கியார்களால் கிறிஸ்துவின் சுத்த சுவிசேஷத்தை பிரசங்கிக்க முடியுமா?
12. ஒருவர் கர்த்தருடைய சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்தால் அது அவரை மார்க்கப்பிரிவினை கூட்டத்துக்குள் சேர்க்குமா?
13. வேதாகமத்தின் ஒரே சுத்த சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவதின் விளைவு என்னவாக இருக்கும்?
14. விசுவாசத்தினாலே மாத்திரமென்று யார் பிரசங்கிக்கிறார்கள்?
15. எந்த வழியில் பெரும்பாலானவர்கள் பயணிக்கிறார்கள்?
16. நவீன கால சுவிசேஷங்கள் எவைகளை அடையாளப்படுத்து கின்றன?
17. கிறிஸ்துவின் சுவிசேஷம் எதை மேம்படுத்துகிறது?
18. வேறே சுவிசேஷங்கள் இரட்சிக்குமா?
19. எப்படிப் பிரிவினை உண்டாகிறது?
20. ரோமர்16:17,18; 11 யோவான் 9-11 மற்றும் வெளி 22:18,19 வசனங்களை வாசிக்கவும்.
21. மற்ற சுவிசேஷங்களை பிரசங்கிக்கிறவர்கள் தாங்கள் செய்கிறவைகளில் நேர்மையாகவும், உண்மையாகவும் இருக்கிறார்களா?
22. கூலிக்காக வேலைக்கு அமர்த்தப்படுகிற அவர்களைப் பற்றி எழுதுக?
23. எப்படி வேதாகம ஒற்றுமையைக் கொண்டு வர முடியும்?

பாடம்-13

# நற்செய்தியைத் தடை செய்தல்
# Hindering The Gospel

சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தினாலே பிழைப்புண்டாக வேண்டும் என்னும் உண்மையை பவுல் விவாதித்துக் கொண்டிருக்கும் போது தொடர்ந்து இவ்விதமாக சொல்கிறார் *'மற்றவர்கள் உங்களிடத்திலே இந்த அதிகாரத்தைச் செலுத்தினால், அவர்களிலும் நாங்கள் அதிகமாய்ச் செலுத்தலாமல்லா? அப்படியிருந்தும், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாதொரு தடையும் உண்டாகாதபடிக்கு, நாங்கள் இந்த அதிகாரத்தைச் செலுத்தாமல் எல்லாப் பாடும்படுகிறோம்'* [1கொரிந்தியர் 9:12]. இங்கே பவுல் சுவிசேஷத்திற்குத் தடையாக இருக்காவிட்டாலும் கூட ,அவரோ அல்லது வேறு யாரோ அப்படிச் செய்வதற்கு வாய்ப்பு உண்டு என்னும் உண்மையை நிச்சயமாய் அறிந்திருந்தார். இது எந்த அளவு உண்மையாக இருக்கிறது.

இயற்கையாகவே தவறை பிரசங்கிக்கிறவர்களும் ,அதற்கு ஆதரவாகப் பேசுகிறவர்களும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைத் தடை செய்வதற்கு பெரும் பங்கு வகிக்கிறார்கள். சில வேளைகளில் கிறிஸ்துவின் சுவிசேஷம் தடைபடுவதற்கு கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினர்களே காரணமாகி விடுகிறார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை நாம் எந்தெந்த விதங்களில் தடை செய்கிறோம் என்பதைக் கீழ்க்கண்டவாறு காண்போம்.

1. நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை மற்றவர்களுக்குப் பிரசங்கியாமலும், போதியாமலும் இருக்கும்போது நாம் தடை செய்கிறோம். சுவிசேஷம் எல்லோருக்குமானது. அது எல்லோருக்கும் பகிரப்பட வேண்டும். இதற்காகத்தான் நாம் இருக்கிறோம். அதை நாம் சக மனிதர்களிடத்தில் எடுத்துச் செல்லும்படி கர்த்தரால் கட்டளையிடப்பட்டிருக்கிறோம் [மாற்கு 16:15,16]. இதை நாம் இரண்டு விதங்களில் செய்யலாம். நம்முடைய வாயின் வார்த்தைகளினாலே பிரசங்கிக்க முடியும் அல்லது நாம் வாழும் வாழ்க்கையின் மூலமாக போதிக்க முடியும். எல்லோரும் இவ்விரண்டையும் செய்ய வேண்டும். ஆனால், பலர் இரண்டில் ஒன்றைக் கூட

செய்வதில்லை. இதன் பொருள், நாம் மற்றவரிடத்தில் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லத் தவறும் போது அதன் வளர்ச்சியை நாம் தடுக்கிறோம் இது பாவமாகும்.

2. நாம் சபை கூடத் தவறும் போது சுவிசேஷத்தைத் தடை செய்கிறோம். அது எப்படி? அது மிக சுலபமானது. நாம் சபை கூடத் தவறும் போது கர்த்தரை ஆராதிக்க தவறுகிறோம். அது மாத்திரமல்லாமல், நாம் ஆவிக்குரிய ஆகாரத்தை உட்கொள்ளவும் தவறி விடுகிறோம். அதையும் தாண்டி நாம் ஆராதனையை அலட்சியம் செய்வதால் மற்றவர்களுக்கு முன்பாக ஒரு மோசமான உதாரணத்தை வைத்து விடுகிறோம். இதை உணர்ந்தவராகத்தான் எபிரெய ஆசிரியர் இவ்விதமாக புத்திமதி சொல்லுகிறார் . *'அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம். வாக்குத் தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து, சபை கூடிவருதலைச் சிலர் விட்டு விடுகிறது. போல நாம் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம். நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்ல வேண்டும். சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்' (எபிரெயர் 10:23-27).*

3. நாம் கிறிஸ்தவர்களாக மேம்படத் தவறும் போது சுவிசேஷத்தை தடை செய்கிறோம். நாம் ஆவிக்குரிய பிரகாரமாக பலவீனமாய் இருக்கும்போது யாரோ ஒருவர் நமக்கு போதிப்பது அவசியமாய் இருக்கிறது. இதைத்தான் எபிரெய ஆசிரியர் மிகச் சரியாகச் சொல்கிறார். காலத்தைப் பார்த்தால் போதகராயிருக்கவேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள். பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். *பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத் தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்.* '[எபிரேயர் 5:12–14].

4. நாம் வாழ வேண்டிய அளவுக்கு வாழாத போது கர்த்தருடைய வேலையைத் தடை செய்கிறோம். இக்காரியத்தில் நாம் கர்த்த ருடைய பெயருக்கு அவமானத்தையும், நிந்தையையும் கொண்டு வருகிறோம். உலகம் நம்மை சுட்டிக்காட்டி, பரிகாசம் செய்து நாம் கிறிஸ்தவத்திற்கு துர் அடையாளமாக இருந்தால் அந்த கிறிஸ் தவத்தில் பங்கு வகிக்க உலகம் விரும்பாது. நாம் உண்மை யும், நன்மையும் ஆனவர்கள். நமது செயலால் இடறி விழுவதற்கு காரணமாகி விடுகிறோம். நாம் மற்றவர்களுக்கு முன்பாக மிக மோசமான உதாரணத்தை வைத்து விடுகிறோம். நாம் வெறுமனே கிறிஸ்தவர்கள் என்கிற பெயரை மாத்திரம் தரித்துக்கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்பவில்லை. மாறாக, உண்மையான கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். நாம் எல்லாவற்றையும் அவருடைய நாமத்துக்காக அவருடைய மகிமைக்காக செய்ய வேண்டும் என்று விரும்புகிறார். பவுல் சொல் வதைக் கவனியுங்கள் (கொலோசெயர்3:17) *'வார்த்தையினா லாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்'. பேதுரு இவ்விதமாக சொல்கிறார். நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்; ஏனென்றால், தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்; அவர்களாலே தூஷிக்கப்படுகிறார்; உங்களாலே மகிமைப் படுகிறார். ஆதலால், உங்களில் ஒருவனும் கொலைபாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நியகாரியங்களில் தலையிட்டுக்கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக் கூடாது. ஒருவன் கிறிஸ்தவனா யிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினி மித்தம் தேவனை மகிமைப்படுத்தக் கடவன். நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தி யில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்?*

*ஆகையால், தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மை செய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மை யுள்ள சிருஷ்டி கர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக் கடவர்கள்' (1 பேதுரு 4:14-19).*

5. நம் கடமையையும், பொறுப்பையும் அலட்சியப்படுத்துவதன் மூலமாக கர்த்தருடைய வேலையை நாம் தடுக்க முடியும். கர்த்தருடைய சபை அங்கத்தினர்களில் பலர் மோசமானவர்களோ

அல்லது ஒழுக்கக்கேடானவர்களோ அல்ல. அவர்கள் வேண்டும் என்று எந்த ஒரு தவறான காரியத்தையும் செய்வதில்லை. எனவே, பலர் அவர்களை நல்லவர்கள் என்று சொல்லுவார்கள். ஆனால், பலவீனம் என்னவென்றால், அவர்கள் செய்ய வேண்டிய அநேக காரியங்களை செய்யாமல் விலகிப் போவதும், தட்டிக் கழிப்பதும் தான். ஆனால், அலட்சியப்படுத்துவது, செயல்படத் தவறுவது, அஜாக்கிரதையாய் இருப்பது போன்றவைகள் அபாயகரமானவை களாகும். இது நம் அன்றாட வாழ்வில் உண்மையாய் இருக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இது ஆவிக்குரிய வாழ்விலும் உண்மையாய் இருக்கிறது. யாக்கோபு இவ்விதமாய் சொல்லுகிறார். *'அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திரு வசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதின்படி செய் கிறவர்களாயும் இருங்கள் (யாக்கோபு 1 : 22)..*

*கடைசியாக நாம் இவ்விதமாய் வாசிக்கிறோம். ஆகையால், நாம் கேட்டவை களை விட்டு விலகாதபடிக்கு, அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டும். ஏனெனில், தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க, முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும்....'* [எபிரேயர் 2:1–3].

6. நாம் காணிக்கை கொடுக்கத் தவறுவதன் மூலமாக சுவிசேஷத்தை தடை செய்யலாம். சபையானது ஏழைகளுக்கு உதவுவதற்கும், ,சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கும் அதன் அங்கத்தினர்களை சார்ந்து இருக்கிறது. நாம் காணிக்கை குறைவாகக் கொடுக்கும் போது அல்லது கொடுக்காமல் இருக்கும்போது சபைக்கடுத்த காரியங்கள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் கட்டுப்படுத்தப் படுகிறது. அதனால் தான் வேதாகமம் நாம் காணிக்கை கொடுக்கத் தவறும் போது தேவனை வஞ்சிக்கிறோம் அல்லது அவரை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் கட்டுப்படுத்துகிறோம் என்று சொல்லு கிறது. நாம் அதிகமாக காணிக்கை கொடுக்கும் போது சபை அதிகமான ஊழிய காரியங்களில் ஈடுபடுவது மாத்திரமில்லாமல் ,ஏழைகளுக்கு உதவும் காரியங்களிலும் ஈடுபடும். எனவே தான், பவுல் இவ்விதமாக புத்திமதி சொல்கிறார். *'நான் வந்திருக்கும் போது பணம் சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன்*

*வாரத்தின்* முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்தில் சேர்த்து வைக்கக்கடவன்‘[1 கொரிந்தியர் 16:2]. நாம் கொடுக்க வேண்டிய அளவுக்கு கொடுக்கத் தவறும் போது அது பலர் சுவிசேஷத்தைக் கேட்கவும், உதவி தேவையில் இருப்போர் அதைப் பெற்றுக் கொள்ளாமல் இருப்பதற்கும் தடையாக அமையும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். எனவே, பல ஆத்துமாக்களும், சரீரப்பிரகாரமான நன்மைகளும் நாம் கொடுக்கும் காணிக்கையில் சம்பந்தப்படுத்தப்படுவதால் அதை விளையாட்டாக எடுத்துக் கொள்ளாமல் ஊக்கமாக நாம் காணிக்கை கொடுக்க வேண்டும்.

பல சந்தர்ப்பங்களில் நாம் உலகம் முழுவதற்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்வதற்கு மார்க்க பிரிவினைக் கூட்டத்தார் பெரும் தடையாக இருக்கிறார்கள் என்று அவர்களை குற்றம் சாட்டுகிறோம். ஆனால், பெரும்பாலான தவறுகள் நம் காலடியிலேயே கிடக்கின்றன என்பதை நாம் உணர்வதில்லை. தூய புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவம் உலகம் முழுவதும் பரவுவதற்கு அந்த மார்க்க பிரிவினைக் கூட்டத்தார் ஒரு தடையாக இருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால், கர்த்தர் நாம் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறாரோ அதைத் தொடர்ந்து செய்கிறவர்களாக இருந்தால், உலகம் முழுவதற்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்வது உட்பட கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு எந்த ஒரு வெளிப்புறமான சக்தியும் நம்மை தடுக்க முடியாது என்பதை ஒரு போதும் மறந்துவிட வேண்டாம். ஆனால், ஊழியத்தை உலகெங்கும் எடுத்துச் செல்வதற்கு பெரும் பாலும் நம்முடைய பலவீனங்கள், நம்முடைய தோல்விகள், நம்முடைய விசுவாசக் குறைவுகள், நம்முடைய பாவங்கள் போன்றவைகள் தான் நாம் தொடர்ந்து முன்னோக்கிச் செல்லாமல் நம்மைத் தடுக்கின்றன.

நாம் சத்தியத்திற்காக உறுதியான நிலைப்பாட்டை எடுக்க தேவன் தாமே நமக்கு அதிகமான விசுவாசத்தையும், அன்பையும், வைராக்கியத்தையும், தைரியத்தையும் தருவாராக. நாம் அன்றாட வாழ்வில் சத்தியத்தின்படி வாழ்ந்து அந்த சத்தியத்தை இழந்து போகின்ற உலகத்திற்கு எடுத்துச் செல்வோமாக. நாம் ஒன்றிலே சுவிசேஷத்திற்குத் தடையாக இருக்க முடியும் அல்லது அதை தூக்கிப்பிடித்து அதை மேம்படுத்துகிறவர்களாக இருக்க முடியும். நாம் இரண்டாவது வகையைச் சார்ந்தவர்களாக இருக்கிறோம் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வோம்!

## கேள்விகள்

1. ஒருவரால் சுவிசேஷத்தைத் தடை செய்ய முடியுமா?
2. சுவிசேஷத்தைத் தடை செய்யும் சிலரைக் குறிப்பிடுக
3. கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்களும் சுவிசேஷத்தை தடை செய்ய முடியுமா?
4. நாம் மற்றவர்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்காமல் இருந்தால் என்ன நடக்கும்?
5. நாம் எந்த இரண்டு விதங்களில் மற்றவர்களுக்கு போதிக்க வேண்டும்?
6. நாம் சபை கூடி வருதலை விட்டு விட்டால் எப்படிக் கர்த்தருடைய காரியங்களுக்குத் தடையாக இருப்போம்?
7. எபிரெயர் 10:23–27 வசனங்களை வாசித்து அதை விவாதியுங்கள்.
8. நாம் ஆவிக்குரிய பிரகாரமாக பெலவீனமாக இருக்கும்போது எது அவசியமாய் இருக்கிறது?
9. எப்படி கிறிஸ்தவர்கள் வாழ வேண்டும்?
10. நாம் வாழ வேண்டிய அளவுக்கு வாழத் தவறும் போது என்ன செய்கிறோம்?
11. கொலோசெயர் 3:17 யை மேற்கோள் காட்டுக
12. 1 பேதுரு 4:14–19 வசனங்களை வாசித்து அதை விளக்குக
13. கிறிஸ்தவர்களுக்கு ஏதாவது கடமைகள் மற்றும் பொறுப்புகள் இருக்கின்றனவா?
14. யாக்கோபு 2 எதை போதிக்கிறது?
15. நம்முடைய இரட்சிப்பைக் குறித்து கவலையற்று இருப்போமானால் தண்டனைக்கு தப்பித்துக் கொள்ளுவோம்? வழி உண்டா?
16. நாம் கொடுக்க வேண்டிய அளவுக்கு கொடுக்கத் தவறினால் எவ்விதத்தில் சுவிசேஷத்திற்கு தடையாக இருப்போம்?
17. நாம் எப்போது தேவனை வஞ்சிக்கிறோம்? நாம் அவரை எப்படி ஒரு எல்லைக்கு உட்படுத்துகிறோம்?
18. 1 கொரிந்தியர் 16:2 எதை போதிக்கின்றது?
19. கிறிஸ்துவுக்கடுத்த காரியங்களில் மற்றவர்களை விட யார் அதிக தடையாக இருக்க முடியும்?
20. நாம் எவ்விதமான ஜனங்களாக இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்?